விலை ரூபா: 8.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 மாசி 22 ஞாயிற்றுக்கிழமை (06.03.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 77

புதுப் பொலிவுடன் திருநெல்வேலியில்

WESTERN UNION பணப் பரிமாற்றம்

* விரைவானது * பாதுகாப்பானது * நம்பகமானது

இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு

♦பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத் தேவையில்லை
♦வங்கிக் கணக்கு அவசியமில்லை
♦நீடிக்கப்பட்ட சேவை நேரம்
♦365 நாள் சேவை
♦10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்

THIRUMURUGAN COM NET

T.P. 021 2227310
021 2227555
021 2227560
FAX 021 2227310
E-mail: thirumurugan@eudoramail.com

46, ஆடியபாதம் வீதி, (ப.நோ.கூ.ச. முன்பாக) திருநெல்வேலி யாழ்ப்பாணம்

# அரசின் புதிய தகவலுடன் பிரட்ஸ்கர்- புலிகள் சந்திப்பு

## பொதுக் கட்டமைப்புப் பற்றி தொடர்ந்து பேச்சு நடத்த தயாரெனவும் அறிவிப்பு

சுனாமி நிவாரணப் பணிகளில் அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் இணைந்து பணியாற்றக்கூடிய வகையில் பொதுக்கட்டமைப்பை உருவாக்கும் விடயத்தில் அரசின் புதிய தகவல் ஒன்றுடன் நோர்வேத் தூதுவர் நேற்று கிளிநொச்சிக்குச் சென்றுள்ளார்.

(௧௨ ஆம் பக்கம் பார்க்க)



## மட்டக்களப்பில் நேற்று வெவ்வேறான மூன்று துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள்

### போராளி உட்பட இருவர் பலி; இருவர் காயம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று இனந்தெரியாத நபர்களினால் மேற்கொள்ளப்பட்ட மூன்று வெவ்வேறான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களின்போது இருவர் கொல்லப்பட்டுள்ளார்கள். மேலும் இருவர் காயமடைந்துள்ளார்கள்.

கொல்லப்பட்டவர்களில் ஒருவர் விடுதலைப் புலிகளின் உறுப்பினர் என்றும் மற்றையவர் கருணா குழுவுடன் தொடர்புடையவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முற்பகல் வாகரைப் பிரதேசத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக் குட்பட்ட கிரிமத்தையவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்திலேயே விடுதலைப்புலி உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். இச் சம்பவத்தில் மற்றும் ஒரு போராளி . காயமடைந்துள்ளார்.

இவர்கள் மீது இனந்தெரியாத நபர்கள் பதுங்கியிருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக விடுதலைப் புலிகளின் தரப்பு தகவல் தெரிவிக்கின்றன. இதேவேளை

(12 ஆம் பக்கம் பார்க்க)

### இராணுவம், பொலிசாரின் அத்துமீறல் குறித்து

## சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை ம.உ.ஆணைக் குழுவில் முறைப்பாடு

(திருநெல்வேலி)

நேற்று முன்தினம் மதியம் தமது அலுவலகத்தினுள் அத்துமீறி நுழைந்து இராணுவத்தினரும் பொலிசாரும் மேற்கொண்ட அடாவடி நடவடிக்கைகளினால் ஏற்பட்ட சொத்து இழப்பிற்கு உரிய நஷ்ட ஈட்டை பெற்றுத்தருவதோடு இந் நடவடிக்கைகளில் ஈடுபட்டோரை இனங்கண்டு சட்டத்தின் முன் நிறுத்துமாறும் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை இலங்கை மனிதவுரிமை ஆணைக் குழுவின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளது.

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை மனிதவுரிமை ஆணைக் குழுவில் செய்துள்ள தனது முறைப்பாட்டில்,

04.03.2005 அன்று மதியம் 2.15 மணியளவில் எமது மாணவர் பேரவை அலுவலகத்திற்குள் அத்துமீறி நுழைந்த இராணுவத்தினரும் பொலிசாரும் எமது மாணவர் பேரவையில் கடமையின் நிமித்தம் வந்திருந்தோரையும் பணியாளரையும் மிரட்டியதுடன் துப்பாக்கியாலும் சுட்டுள்ளனர்.

அத்துடன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த துவிச்சக்கரவண்டிகளையும் உந்துருளிகளையும் சேதப்படுத்தியதுடன் கட்டடத்தையும் சேதப்படுத்தியுள்ளனர். அத்தோடு எமது துவிச்சக்கரவண்டிகளும் உந்துருளிகளும் கைத்தொலைபேசிகளும் இவர்களால் களவாடப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. (12 ஆம் பக்கம் பார்க்க)

## வன்முறைகளை எதிர்பார்த்து படையினர் தயார் நிலை

(யாழ்ப்பாணம்)

இராணுவ உழவு இயந்திர விபத்தில் உயிரிழந்த வேம்படி உயர்தரப் பாடசாலை மாணவியின் இறுதிக்கிரியை நேற்று நடைபெற்றபோது அசம்பாவிதங்கள ஏதாவது ஏற்படலாம் என்ற அச்சம் காரணமாக ஐந்து சந்தியில் பெருமளவு இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருந்தனர்.

பிரஸ்தாப மாணவியின் வீட்டிற்கு அருகாமையில் உள்ள இராணுவக் காவலரணான ஐந்து சந்திக் காவலரணுக்குளும் அதன் மேல்மாடியிலும் பெருமளவு இராணுவத்தினர் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தனர்.

எனினும், அசம்பாவிதங்கள் எதுவும் இன்றி இறுதிக் கிரியைகள் நடந்துமுடிந்தன. இறுதிக் கிரியையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி, போராளிகள், மாணவர்கள் உட்படப் பெருமளவானோர் கலந்துகொண்டனர். (த-04)

# புலிகள் - இராணுவம் - பொலிஸ் நேற்று சந்தித்துப் பேச்சு

(யாழ்ப்பாணம்)

போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் அழைப்பின் பேரில் யாழ். மாவட்ட கண்காணிப்புக் குழு செயலகத்தில் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா படைத்தரப்பு மற்றும் காவல்துறையினருக்கும் இடையில் நேற்று சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

இச் சந்திப்பில் படைத்தரப்பின் வாகனத்தால் மோதப்பட்டு பலியான மாணவி மீதான விபத்துச் சம்பவத்தை அதனை சிறிலங்கா காவல்துறையினர் சட்டத்திற்கு முரணாக மக்கள் பார்த்துக்கொண்டிருக்க மூடிமறைக்க மேற்கொண்ட தடயம் அழிப்பு நடவடிக்கைக்கு எமது கண்டனத்தை தெரிவிக்கின்றோம் என விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை தீவின் எல்லா இடங்களிலும் இராணுவத்தின் காவலரண்களும் இராணுவ வாகனத்தின் போக்குவரத்தும் நடைபெறுகின்றன. ஆனால் அங்கு மக்களை பலியெடுக்கின்ற விபத்துக்கள் நடைபெறுகின்ற வீதத்தையும் விட குடாநாட்டில் தொடர்ச்சியாக இராணுவ வாகனங்களினால் மக்களும் மாணவர்களும் மோதப்பட்டு கொல்லப்படுகின்ற சம்பவங்கள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன. ஆகவே இதன் பின்னால் உள்ள பிரச்சினைகளை ஆராய வேண்டும்.

குறுகிய ஒரு நிலப்பரப்பிற்குள் கூடுதலான இராணுவத்தினர் நிலைகொண்டிருப்பது, கூடுதலான வாகனங்கள் மக்களின் போக்குவரத்திற்கு இடைஞ்சலாக இருக்கும். கனரக வாகனங்களின் போக்குவரத்தும், கட்டுப்பாடற்ற வேகமும், தரநிர்ணயதிற்கு அப்பாற்பட்ட இராணுவ வாகனங்களின் பாவனையும் கொல்லப்படுபவர்கள் தமிழர்கள் தானே என்ற மனோபாவ நிலையும், இராணுவ சாரதிகளின் அசமந்த நிலையுமே இவ் விபத்துக்களுக்கு காரணமாய் அமைகின்றன.

மக்களின் போக்குவரத்திற்கு அவசியமான தடைசெய்யப்பட்ட பாதைகள் திறக்கப்படவேண்டும். போக்குவரத்திற்கு தடையாக இருக்கும் காவலரண்கள் அகற்றப்படவேண்டும். மக்கள் போக்குவரத்து நெரிசலாக உள்ள இடத்தில் கனரக வாகனங்களின் போக்குவரத்து நிறுத்தப்படவேண்டும்.

விடுதலைப் (12 ஆம் பக்கம் பார்க்க)

## சிறுவன் கைது

(கொழும்பு)

இலங்கை கடற்படைத் தலைமையகத்தின் பிரதான வாசலுக்கு அருகாமையில் சந்தேகத்திற்குரிய வகையில் நடமாடியதாக குற்றம் சுமத்தி 14 வயது தமிழ்ச் சிறுவன் ஒருவன் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஆர்ப்பாட்டம்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டம் புல்மோட்டை கிராமத்தில் முஸ்லிம் மக்கள் நேற்றுக் காலை 11.00 மணிக்கு இராணுவத்தினருக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

புல்மோட்டை இராணுவ முகாமிற்கு அருகில் உள்ள மையவாடியில் புதைக்கப்பட்ட சடலங்களை இராணுவத்தினர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

SWISS Mineral Water

Buy Swiss Mineral and win several lakhs worth of prices



Head office
Gbn, Posfach
8026 Zurich, Switzerland,
Tel.+41 243 82 59

Factory
231, Temple Road,
Nallur, Jaffna.
Tel.+94 77 312 69 63

சுவிஸ் மினறலின் யாழ்குடா நாட்டிற்கான ஏக விநியோகஸ்தர்கள் யாழ்மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவு சங்கங்களின் சமாசம். தொலை பேசி : 0094 21 222 2662

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அரச, சர்வதேச உதவிகள் புறக்கணிப்பு

# முதற்கட்ட நிவாரண, புனர்வாழ்வுப் பணிகளுக்கு உள்ளூர் வளங்களே பயன்படுத்தப்பட்டன

## சு.ப.தமிழ்ச்செல்வன்



(கிளிநொச்சி)

**சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழர் தாயகப் பிரதேசமக்களுக்கான முதலாம் கட்ட நிவாரணப்பணிகளை உள்ளூர் வள்ங்களைப் பயன்படுத்தியும் புலம் பெயர்வாழ் உறவுகளின் உதவிகளைப் பயன்படுத்தியுமே நிறை வேற்றி யுள்ளோம். எமது இரண்டாம கட்டநிவாரணப்பணிகளும் இதேவளப் பயன் பாட்டுடன் தான் துரிதமாக முன்னெடுக்கப்பட்டுவருகிறது.**

**அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்ட சர்வதேச உதவிகள் எதுவும் தமிழர் தாயகப்பகுதிகளை வந்தடையவில்லை. அவை தென்னிலங்கையில் முடக்கப்படடுள்ளன இது எமக்கு பெரும் ஏமாற்றத்தைத் தந்துள்ளது.**

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு ஊடகவியலாளர் ஒருவருக்கு நேற்றுமுன் தினம் கிளிநொச்சியில் வைத்து வழங்கிய செல்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுவாக பல நாடுகள் தங்களுடைய இராணுவங்களை அனுப்பி உடனடி மீட்புப்பணிகளுக்கு உதவியிருக்கின்றார்கள். அதேபோல் இந்தியாவும் அனுப்பியிருந்தது.

இந்தியா ஒரு பகுதிக்குள் மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பணியாற்றியதாகத் தான் நாங்கள் கேள்விப்பட்டோம. ஆகையால் அதைப்பற்றி நாங்கள் நேரடியாகப் பார்க்கவோ, அந்தப்பகுதி மக்களிடமிருந்து அறியவோ, அறிந்து கொள்வதற்கான வாய்ப்புக்கள் எமக்கு கிடைக்கவில்லை.

ஆனால் பொதுவாகவே சர்வதேச சமூகம் எல்லோருமே இணைந்து இந்த நிவாரணப் பணிகளை செய்திருக்கின்றார்கள்.

இந்திய இராணுவம் நிவாரணப்பணிகளுக்காக வந்தபோது அவர்களை விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு அனுமதிக்க மறுக்கவில்லை. அவர்களும் அதற்கான முயற்சியை எடுக்கவில்லை.

ஒருவேளை, வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தால் நிச்சயமாக அதை ஏற்றிருப்போம்.

எங்களைப் பொறுத்த வரையில் தமிழர்தாயகப் பிரதேசத்தில் அனைத்துப் பகுதிகளிலும் சர்வதேச சமூகம் எம் மக்களுக்கு உதவவேண்டும் என்பதில் விருப்புடன் உள்ளோம்.

அவர்களுடைய உதவிகள் வரவேண்டும என பகிரங்கமாகக் கோரியிருந்தோம். அவர்கள் நிச்சயமாகக் கேட்டிருந்தால் நாஙகள் அதற்குச் சாதகமாக அதனைப் பரிசீலித்திருப்போம்.

இந்திய இராணுவம் தவிர தற்போது நடைபெற்றுவரும் சுனாமி புனரமைப்பு நடவடிக்கைகளில் இந்திய தன்னார்வு கொண்டு நிறுவனங்களோ, அரசசார் தொண்டு நிறுவனங்களோ வந்து செயற்பட வேண்டுகோள்கள் விடுத்திருந்தால் எங்களுடைய தலைமைப்பீடம் அதனை பரிசீலனை செய்து நிச்சயமாக அதற்கான சாதகமான முடிவுகளை எடுப்போம்.

இந்திய அரசாங்கம் இலங்கையின் இனப்பிரச்சினையில் உடனடியாகத் தலையிடவேண்டும் என்றும், இலங்கையின் இனப்பிரச்சினைக்கு இந்தியா என்ன தீர்வினை முன்வைக்கின்றது என்பதை பகிரங்கப்படுத்த வேண்டும்.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் மீண்டும் இந்தியா சென்றிருந்தபோது தெரிவித்துள்ளார்.

சிங்கள அரசுகள் இங்கே தமிழ் மக்களுடைய பிரச்சினைகள் சம்பந்தமாக எப்பொழுதும் ஒரு பொறியினைப் போடுவதுதான் வழக்கம்.

அதேபோலத்தான் உண்மையிலேயே இங்குள்ள பிரச்சினைக்குத் தீர்வை முன்வைக்க வேண்டியவர்கள் இலங்கை அரசுதான்.

அதனைவிடுத்து இந்தியாவிடம் போய் இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்ப்புக்காணுவதற்கான கோரிக்கையினை விடுப்பது என்பது நகைப்புக்கிடமாகவுள்ளது.

ஏனெனில் இலங்கை அரசும் விடுதலைப்புலிகளும் பேசக்கூடிய பேச்சுவார்த்தைகளைத் தொடங்கக்கூடிய சாதகமான சூழல் இருக்கின்றது. தீர்வை முன்வைக்கக் கூடிய, அவற்றை பரிசீலிக்கக்கூடிய சூழ்நிலைகள் எல்லாம் இருக்கின்றன.

அவற்றையெல்லாம் புறந்தள்ளி ஒதுக்கிவிட்டு இந்தியாவில் நின்றுகொண்டு இப்படிப் பேசுவது என்பது இந்தியாவை மேலும் சிக்கலுக்குள் அல்லது பொறிகளுள் தள்ளுவது போன்றதொரு செயலில் ஈடுபடுகின்றார்களே தவிர அவர்கள் மனப்பூர்வமாக தமிழ்மக்களுடைய பிரச்சினைக்குத தீர்வுகாணவேண்டும்.

இநத இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும். எந்தக் கரிசனையும் இல்லாமல் காலத்தை இழுத்தடிப்பதும், தீர்வில்லாத ஒரு நெருக்கடி நிலைமையினை ஏற்படுததுவது தான் இலங்கை அரசின் நோக்கமாக இருக்கிறது என அவர் மேலும் தெரிவித்தார்.(ப-4)

## இராசி பலன்

**06.03.2005**
**மாசி 22, ஞாயிற்றுக்கிழமை**
**ஏகாதசி பின்னிரவு 12.17 மணிவரை**
**பூராடம் முற்பகல் 11.18 மணிவரை**
**இராகுகாலம் 4.55 - 6.25 மணிவரை**
**சுபநேரம் 9.25 - 10.55 மணிவரை**
**சித்தாமிர்தம், ஏகாதசி விரதம்**

- **மேடம்**: ஆன்றோர் மதிப்பு, கட்டுப்பாடு, அச்சமான நிலை, ஆரோக்கியக் குறைவு.
- **இடபம்**: வீண்தொல்லை, எடுத்தகருமங்கள் தாமதமாகும், போசன சுகம், வேலைச்சுமை.
- **மிதுனம்**: வாகன வசதி, அபூர்வ சந்திப்பு, உற்சாகம், காரிய அனுகூலம்.
- **கடகம்**: பகைவர் நேசம், சுகவாழ்வு, பணவருவாய், முயற்சிகைகூடும்.
- **சிங்கம்**: காரிய இடையூறு, மனக்கவலை, தொழில் சிந்தை, உறவினர் சந்திப்பு.
- **கன்னி**: பயந்த சுபாவம், அற்பர் உறவு, கல்வியில் ஆர்வம், முயற்சி தாமதம்.
- **துலாம்**: இனிய சம்பவம், கூட்டுமுயற்சி, அந்நியர் சந்திப்பு, வாக்குமேன்மை.
- **விருச்சிகம்**: பொருள்விரயம், கோபப்படுதல், முயற்சி தாமதம், போசன சுகக்குறைவு.
- **தனுசு**: நல்ல முயற்சி, ஆழ்ந்த சிந்தை, பெரியோர் சந்திப்பு, போசன சுகம்.
- **மகரம்**: அதிகவார்த்தை, எடுத்தகாரியம் தாமதமாகும், பண விரயம், பிரயாணம்.
- **கும்பம்**: பெருமையடைதல், உறவினர் சந்திப்பு, முயற்சி கைகூடும், உற்சாகம்.
- **மீனம்**: பிறர் உதவி, நல்ல முயற்சி, நல்ல தகவல், அதிகாரம்.

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது**

**-வளவன்**

## கட்டடத் தேவைகளுக்காக மீண்டும் மணல் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

சுனாமி அனர்த்தம் காரணமாகத் தடைப்பட்டிருந்த கட்டடத் தேவைக்கான மணல், மீண்டும் முன்னர் போல் வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனத்தின் புலோலி உபய கதிர்காமத்திலுள்ள அலுவலகத்தினால் நாளை திங்கட்கிழமை தொடக்கம் விநியோகிக்கப்படவுள்ளது.

மணல் கொண்டு செல்வதற்கான வழி அனுமதிப் பத்திரமும் முன்னர் போன்று வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபரின் தும்பளை, பருத்தித் துறையிலுள்ள உப பணிமனையினால் வழங்கப் படவுள்ளது.

மணல் தேவைப்படுவோர் மேற்குறித்த இரு பணிமனைகளுடனும் தொடர்பு கொண்டு மணலைப் பெற்றுக்கொள்ளுமாறு யாழ்.மாவட்ட உதவி அரசாங்க அதிபர் வே.வீரபத்திரபிள்ளை அறிவித்துள்ளார்.

மீளக்குடியமர்த்தல், புனர்வாழ்வு, புனரமைப்பு, மீள்கட்டுமான அபிவிருத்திச் செயற்பாடுகளை மேற்கொண்டுள்ள நிறுவனங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் மணல் குறித்த நிறுவனத்தினால் வழங்கப்படவுள்ளது. இவற்றிற்கு அரசாங்க அதிபரின் சிபார்சு தேவையில்லையெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## சுழிபுரத்தில் திருட்டுக்கள் அதிகரிப்பு

(மாதகல்)

• சுழிபுரம் பகுதியில் திருடர்களின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுகிறது. சனநடமாட்டமில்லாத வீடுகளில் இரவில நுழையும் திருடர்கள் அங்கிருக்கும் கதவுகளை கழற்றிச் சென்றுவிடுகின்றனர்.

அண்மையில் இப் பகுதியிலுள்ள ஆள்களில்லாத ஐந்து வீடுகளில் திருடர்கள் தமது தொடர் கைவரிசையைக் காட்டியிருக்கின்றனர். (க-24)

## பவளக்கால் நாட்டும் வைபவம்

(காரைநகர்)

காரைநகர் மணற்காட்டு முத்துமாரியம்மன் ஆலய புதிய சித்திரத்தேரிற்கு பவளக்கால் நாட்டும் வைபவம் இன்று மு.ப.9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

முத்துமாரியம்மன் ஆலய தேர்த்திருப்பணிச் சபையினரின் முயற்சியில் அராலியூர் விஸ்வப் பிரம்மஸ்ரீ சி.அமரசிங்கம் ஆச்சாரிய குழுவால் பல இலட்சம் ரூபா பெறுமதியான சித்திரத்தேர் ஆலயத்தில் அமைக்கப்பட்டுவருகின்றது.

இதற்கான பவளக்கால் நாட்டும் வைபவம் இன்று மு.ப.9.30 மணிக்கு அம்பாளிற்கு விசேட அபிடேக ஆராதனைகள் பின்னர் நடைபெறும்.(க-246)

## குற்றச் செயல்களை தடுக்க பொலிஸார் துரித நடவடிக்கை

(கொழும்பு)

திட்டமிட்டுக் குற்றச்செயல்களில் ஈடுபடும் கோஷ்டிகளுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென பொலிஸ் தலைமை அலுவலகம் மீண்டும் தெரிவித்துள்ளது.

இதற்காக பல பொலிஸ் அதிகாரிகள் விசேட குழுக்களாக நியமிக்கப்பட்டிருப்பதாக பிரதி பொலிஸ்மா அதிபர் ஜயந்த விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார்.

குற்றச் செயல்களில் ஈடுபடுவோரைக் கைது செய்வதற்காக பொலிஸார் இதுவரை மேற்கொண்ட நடவடிக்கைகளின் போது 17 பேர் கொள்ளப்பட்டுள்ளதாகவும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார்.

விசேட புலனாய்வுப் பிரிவினர் தெரிவத்த தகவல்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல்களை அடுத்து, பிரபல குற்றவாளிகள் பலர் தமது இருப்பிடங்களை விட்டு வேறு இடங்களுக்குத் தப்பிச் சென்றுள்ளதாகவும விக்கிரம ரதன மேலும் தெரிவித்தார். (க-7)

### சிவராத்திரி விழாவும் பாற்குட வைபவமும்

(கோண்டாவில்)

மகாசிவராத்திரி விழாவும் பாற்குடவைபவமும் கோப்பாய் தெற்கு பழைய வீதி தென்கோவை ஸ்ரீ சாந்திலிங்கப் பெருமான் திருக்கோவிலில் எதிர்வரும் 8ஆம் திகதி நடைபெறவுள்ளது. (க-130)

# இராணுவம், பொலிஸாரின் நடவடிக்கைகளுக்கு பல்வேறு அமைப்புக்களும் கடும் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

***யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்ற இராணுவ உழவு இயந்திர விபத்தில் யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மாணவி ஒருவர் உயிரிழந்தார். இதனையடுத்து இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களின்போது இராணுவததினரும் பொலிஸாரும் பொது மக்கள் மீது மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதல்களினால் வயோதிபர் ஒருவர் பலியானதுடன் சிலர் காயமடைந்தமையும் தெரிந்ததே.***

***இராணுவத்தினரின் இவ்வாறான நடவடிக்கைகளுக்கு பல்வேறு அமைப்புகளும் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளன.***

தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக்கழகம், யாழ்.மாவட்ட தமிழீழ மாணவர் அமைப்பு, சர்வதேச தமிழீழ மாணவா பேரவை மற்றும் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஆகியன விடுத்துள்ள கண்டன அறிக்கைகளின் விபரம் வருமாறு:

## தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம்

பாடசாலைக்குச் சென்றுகொண்டிருந்த மாணவியின் மீது நேற்றுமுன்தினம் காலை இராணுவ வாகனம் மோதியது. இவ்வாறான இராணுவ வாகன விபத்துக்கள் தொடர்ச்சியாக யாழ்.குடாநாட்டில் இராணுவத்தினரால் திட்டமிடப்பட்ட முறையில் மேற்கொள்ளப்பட்டு வருவது எல்லோரும் அறிந்ததே.

இதனால் ஆத்திரம் கொண்ட மக்கள், மாணவர்கள் கொதிப்படைந்து இராணுவ வாகனங்களையும், இராணுவக் காவலரண்களையும் தாக்கி அழித்தனர். இவ்வாறான இராணுவத்தினரின் படுகொலைகள் தொடருமானால் ஆயுதமின்றியே இராணுவக் காடையர்களை இங்கிருந்து மக்களே வெளியேற்றுவதை யாராலும் தடுக்கமுடியாது.

கொதிப்படைந்த மக்களின் தாக்குதலுக்கு முகம் கொடுக்க முடியாத இராணுவத்தினரும், பொலிஸாரும் குடாநாட்டு கல்விச் சமூகத்தின் வளர்ச்சியில் பெரும் பங்கெடுக்கும் நிறுவனமான "சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை" அலுவலகத்தினுள் புகுந்து அங்கு நிறுத்திவைக்கப்பட்டிருந்த மாணவர்களின் துவிச்சக்கர வண்டிகள், உந்துருளிகள் போன்றவற்றை அடித்து நாசமாக்கியதுடன் மாணவர் பேரவை அலுவலகத்தையும் அடித்துச் சேதப்படுத்தினர்.

அத்தோடு மாணவர் பேரவை உறுப்பினர்களை நோக்கி இவர்கள் துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொண்டனர். எனினும், மாணவர் பேரவை உறுப்பினர்கள் தெய்வாதீனமாக காயம் எதுவுமின்றி உயிர்தப்பினர்.

மாணவர் பேரவை மீதான இத்தாக்குதல் திட்டமிட்டே இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்டது. சம்பவதினம் சுனாமியால் பாதிக்கப்பட்ட உயர்கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்க ஒழுங்குகள் செயயப்பட்டிருந்தது. அவ்வேளையில் இவ்வாறான நிகழ்வுகளைக் குழப்பும் எண்ணத்துடன் வேண்டுமென்றே மாணவர் பேரவை மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்தாக்குதலினை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். அத்தோடு பல்கலைக்கழக வாயிலில் வயோதிபர் ஒருவர் சிங்களக் காடையர்களால் சுட்டுக் கொல்லப்பட்டமைக்கும் எமது கண்டனங்களைத் தெரிவித்துக்கொளகின்றோம்.

அன்றைய விபத்தின்போது கொல்லப்பட்ட பாடசாலை மாணவிக்கும், பல்கலைக்கழகம் முன் கொல்லப்பட்ட வயோதிபருக்கும் எமது கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

* * *

## யாழ்.மாவட்ட தமிழீழ மாணவர் அமைப்பு

ஸ்ரீலங்கா இராணுவம் மீண்டும திட்டமிடட முறையில் தமிழ் மக்களையும், மாணவர்களையும் தாக்கியழிக்கும் கொடூரமான நடவடிக்கையினைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது.

நேற்று முன்தினம் காலை பாடசாலை மாணவியினை வாகனத்தால் மோதி கொலைசெய்த இராணுவம், அதனை மூடிமறைக்க முற்பட்டபோது அதனைத் தட்டிக்கேட்க முற்பட்ட மக்களையும், மாணவர்களையும் மூர்க்கத்தனமாகத் தாக்கியதுடன் கைதுசெய்தும் உள்ளனர்.

இதனால் ஆத்திரமுற்ற மக்கள் எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபட்டனர். இதன்போது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் ஒருவர் இறந்ததுடன் பலர் காயமடைந்தும் உள்ளனர்.

இவ்வாறாக பாடசாலை மாணவியைக் கொலைசெயத இராணுவத்தினரையும் அத்துடன் பொது மகன ஒருவரைத் துப்பாக்கிப் பிரயோகம் செய்து கொலைசெயத பொலிஸாரையும, இராணுவத்தினரையும் சட்டத்தின்முன் நிறுத்த உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனக் கோருவதோடு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரனின் அலுவலகம் என்பன தாக்கப்பட்டமையையும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

* * *

## சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை

04.03.2005 அனறு ஸ்ரீலங்கா இராணுவம் தனது வழமையாக பாணியில் தமிழர்களைப் பலியெடுக்கும் நாடகத்தின் ஒருகட்டத்தை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அண்மையில் அரங்கேற்றியது.

இந்தவகையில், ஸ்ரீலங்கா இராணுவத்தின் திட்டமிட்ட பலியெடுப்பில் பாடசாலை மாணவி இராணுவ வாகனத்தால் மோதிக்கொல்லப்பட்டார். ஸ்ரீலங்கா இராணுவத்தின் இக்கொடூரத்தைப் பொறுக்கமுடியாத மக்களும் மாணவர்களும் இராணுவத்திற்கு எதிரான பல்வேறு எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இதற்கு முகங்கொடுக்க முடியாத இராணுவமும் பொலிஸாரும் உயர்கல்வி நிறுவனங்களிற்கு தனது சேவையினை வழங்கிவரும் எமது நிறுவனமான "சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின்" அலுவலகத்திற்குள்ளும், நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரனின் அலுவலகத்திற்குள்ளும் அத்துமீறி நுழைந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்ததுடன் எமது அலுவலகப் பணியாளர்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகமும் செய்ததில் எமது பணியாளர்கள் மயிரிழையில் உயிர்தப்பினர்.

அத்துடன், அங்கு நிறுத்திவைக்கப்பட்டிருந்த 20 இற்கும் மேற்பட்ட துவிச்சக்கர வண்டிகள், 10 உந்துருளிகளை அடித்துச் சேதப்படுத்தியதுடன் அவற்றில் சிலவற்றை எடுத்தும் சென்றனர். கடந்த 2004ஆண்டும் மாவீரர் நாளன்று இதே இராணுவத்தினரும் பொலிசாரும் எமது நிறுவனத்தில் அத்துமீறி நுழைந்து தாக்கியமை குறிப்பிடத்தக்கது.

சம்பவம் நடந்த இடத்திலிருந்து குறிப்பிட்ட தூரத்தில இருந்த எமது நிறுவனத்தின் மீது எந்தவித சம்பந்தமும் இல்லாமல திட்டமிட்டு வேண்டுமென்றெ ஸ்ரீலங்கா இராணுவமும் பொலிஸாரும் தமது அராஜகத்தை அரங்கேற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறான ஸ்ரீலங்கா இராணுவத்தினரதும் பொலிஸாரினதும் அத்துமீறிய செயற்பாட்டை வன்மையாகக கண்டிப்பதுடன், ஸ்ரீலங்கா இராணுவத்தின் திட்டமிட்ட நடவடிக்கையால் பாடசாலை மாணவியும் வயோதிபரும் கொல்லப்பட்டமைக்கு எமது கண்டனத்தை தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேலும், இவ்வாறான கொலை வெறிபிடித்த ஸ்ரீலங்கா அரசபடைகளின் திட்டமிட்ட நடவடிக்கையால் கொல்லப்பட்ட மாணவிக்கும் வயோதிபருக்கும் எமது கண்ணீர் அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

* * *

## யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

04.03.2005 வெள்ளிக்கிழமை காலை நடந்த பாடசாலை மாணவி மீதான இராணுவ உழவு இயந்திரத்தினால் மேற்கொள்ளப்பட்ட விபத்தினைத் தொடர்ந்து நடந்த சம்பவம் எமது மக்களையும் எம்மையும் விசனமடைய வைத்துள்ளது.

அன்று காலை இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தினைப் பொறுத்தவரை குறிப்பிட்ட மாணவி மீது எந்தத்தவறும் இல்லை என்பதும் சம்பவ இடத்தினை நேரில் சென்று பார்த்தால் உண்மை புலனாகும்.

ஆனால் வீதிச்சட்டங்களை மீறி இராணுவத்தினரும், பொலிஸாரும் நடந்துகொண்ட விதமே மாணவர்களையும், மக்களையும் வெகுண்டெழச் செய்துள்ளது.

சாதாரணமாக, ஒரு வீதி விபத்து நடைபெற்றிருப்பின் குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட தரப்பினர் காவல்துறையினரின் அனுமதியின்றி வாகனத்தை இடம் நகர்த்தக்கூடாது.

ஆனால், தன்னுடைய தவறு வெளிப்பட்டுவிடும் என்ற பயத்தினால் தனது தவறினை மூடிமறைக்க வேண்டும் என்பதில் ஸ்ரீலங்கா சிங்களப் படையினரும், காவல்துறையினரும் முனைப்புடன் செயற்பட்டுள்ளனர். தடயங்களை அழித்தது மட்டுமன்றி குறிப்பிட்ட வாகனமும் இராணுவ முகாமினுள் கொண்டுசென்று விடப்பட்டுள்ளுது.

இவ்வாறு தொடர்ச்சியாகத் திட்டமிட்ட வகையில் ஸ்ரீலங்கா இராணுவமும் பொலிஸாரும் மேற்கொண்ட நடவடிக்கைகள் மக்களைத் கொதிப்படைய வைத்துள்ளது. பல்வேறு இடங்களில் தனது இராணுவ அராஜகத்தினையே ஸ்ரீலங்கா இராணுவம் அரங்கேற்றியுள்ளது. எமது பல்கலைக்கழக மாணவர்கள் மீது குறிவைத்து எமது மாணவர்களை பழி தீர்க்கும் எண்ணத்துடன் பரமேஸ்வரா வீதியில் இராணுவ அடக்குமுறை சிந்தனையினை வெளிக்கொணர்ந்துள்ளது.

உயர் கல்வி மாணவர்களின் நலனை மேம்படுத்துவதற்காக சேவையாற்றிவரும் "சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகம்" மீதும், பரமேஸ்வராச்சந்தியில இயங்கிய பாராளுமறை உறுப்பினர் செ.கஜேந்திரனின் அலுவலகத்தின் மதும, பேரவை உறுப்பினர்கள் மீதும், சிங்களக் காடைத்தனத்தினை இராணுவமும், காவல்துறையும் வெளிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

நீண்டகாலமாக பல்கலைக்கழக மாணவர்களையும் அதன் கல்விச் செயற்பாட்டிற்கு உந்துசக்தியாக இருந்து உழைத்துவரும் சாவதேச தமிழீழ மாணவர் பேரவையின் செயற்பாடடினையும் நசுக்கவேண்டும் என்பதில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் கங்கணம் கட்டி இருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதன் தொடர்ச்சியான செயற்பாடாகவே ஸ்ரீலங்கா இராணுவத்தின் இவ் அத்துமீறிய செயற்பாட்டை நாம் கருத வேண்டியுள்ளது.

எமது பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள், பொது மக்களென அனைவரும் இராணுவத்தின அராஜகச் செயற்பாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது சுட்டிக்காட்டப்படவேண்டியதாகும்.

அத்துடன், அப்பாவி வயோதிபர் ஒருவர் இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டில் இறந்துபோனமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறாக ஆயுதமுனையில் எம் மண்ணில் காலை ஊனறிக்கொண்டு எம்மையே நசுக்க எத்தனிப்பதனை இனியும் நாம் தொடர்ந்தும் அனுமதிக்கமுடியாது.

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையை தாக்கி நாசமாக்கியதுடன் அங்கு பணியாற்றிய பணியாளர்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தமையும் பல்கலைக்கழகத்தினுள் நின்ற மாணவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம செய்ததன் விளைவாக எமது பல்கலைக்கழக வாயிலில் நின்ற ஒரு அபபாவிப் பொதுமகன் இறந்தமையும் இராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்ட யுத்தநிறுத்த மீறலாகும்.

இவ்வாறான தொடர்ச்சியான நிகழ்வுகள் இனியும் நடைபெறுமாக இருந்தால் இதனால் ஏற்படப்போகின்ற விளைவுகள் மோசமாக அமையும் என்பதனையும் தெளிவுபடுத்த விரும்புகின்றோம். குறிப்பாக மாணவர் சமூகமே ஒன்றுதிரண்டு மிகப் பெரும் எதிர்ப்புப் போராட்டங்களை முன்னெடுக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்படும்.

எனவே, ஸ்ரீலங்கா இராணுவமும், பொலிஸாரும் மிகவும் கவனமெடுத்து செயற்பட வேண்டும் என்பதனையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

* * *

## யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம்

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி மாணவி ஸ்ரீலங்கா இராணுவ வாகனத்தினால் படுமோசமான நிலையில் தாக்கப்பட்டு மரணமானதையும் அதன் தொடர்பான ஸ்ரீலங்கா இராணுவத்தின் மிலேச்சத்தனமான நடவடிக்கையையும் நாம் மிகவும் வன்மையாகக் கண்டிப்பதுடன் இவை யுத்தநிறுத்த உடன்பாட்டிற்கு அச்சுறுத்தலாகவும், ஆபத்தாகவும் மாறிவிடும் என அஞ்சுகிறோம்.

இராணுவ வாகனத்தின் கோரத் தாக்குதலுக்குப் பலியான பாடசாலை மாணவியின் மரண அறிவிப்பின் உணர்வுகளினால் யாழ்.நகரம் முழுதும் பெரும் சோகமே உருவெடுத்தாற்போல் காட்சியளித்தவேளையில் இந்த உணர்வின் உந்துதலினால் தமது ஆட்சேபனையை ஜனநாயகரீதியல் வெளிக்காட்ட முற்பட்ட பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், இளைஞர் மற்றும் பொதுமக்கள் மீதும் ஸ்ரீலஙகா இராணுவம் தமது மிலேச்சத்தனமான ஆயுத முனையிலான தாக்குதல்களை மேற்கொண்டது.

அத்துடன் யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் நின்ற ஒரு அப்பாவி பொதுமகன் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டு படுகொலை செய்ததும், பலரைக் காயப்படுத்தியதும் அதேவேளை தமிழீழ மாணவர் பேரவையின் யாழ்.செயலகத்தையும் அதன் சொத்துக்களையும் சேதப்படுத்தியதும் ஒரு யுத்தத்திற்கான நேரடி அழைப்பாகவும் அமைதிச் சூழலைத் திட்டமிட்டு குழப்புகின்ற செயற்பாடாகவுமே நாம் கருதுகின்றோம்.

இப்படிப்பட்ட கொடூர நிகழ்வு தொடருமானால் கட்டு மீறும் மக்களின் உணர்வுகளை எவராலும் தடுத்துநிறுத்திட முடியாதென இத்தால் கூறிவைக்க விரும்புகிறோம். இப்படியான சம்பவங்கள் எதிர்காலத்தில் தவிர்க்கப்பட வேண்டுமானால் மக்கள் நடமாட்டமும், போக்குவரத்துக்களும் அதிகமாகவுள்ள நகரப்பகுதிகள் முற்றுமுழுதாக இராணுவமயமற்ற பிரதேசமாக மாறவேண்டும் அல்லது மாற்றி வைக்கப்பட வேண்டும். (ற)

---

# மாகாண தொ.நு.கல்லூரிகள் விரைவில் தரமுயர்த்தப்படும்!

## அமைச்சர் பியசேன கமகே

(கொழும்பு)

மாகாண தொழில்நுட்பக் கல்லூரிகள் ஒன்பது, உயர் தொழில்நுட்ப நிலையங்களாக தரமுயர்த்தப்படவுள்ளன.

இத்தகவலை தொழிற் பயிற்சி அமைச்சர் பியசேன கமகே தெரிவித்துள்ளார். இத்திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக யாழ்ப்பாணம் மற்றும் மருதானை தொழில்நுட்பக் கல்லூரிகள் இவ்வாறு தரமுயர்த்தப்படவுள்ளன.

தேசிய மனிதவள அபிவிருத்தி நிலையம் இதுதொடர்பாக மதிப்பீடு ஒன்றை மேற்கொண்டது.

இம்மதிப்பீட்டின் அடிப்படையில், தொழில்நுட்பக் கல்லூரிகளில் கல்வி கற்கும் மாணவர்களில் 23 சதவீதமானோர் பலவேறு காரணங்களுக்காக அவர்களது பயிற்சிநெறிகளைப பூர்த்தி செய்யாமலே கல்லூரிகளில் இருந்து வெளியேறுவதாகத் தெரியவருகிறது.

கற்கும் பயிற்சிநெறி பற்றிய புரிந்துணர்வு இல்லாமை, தேவையற்ற பயிற்சிநெறிகளை நடாத்துவது, பொருளாதாரப் பிரச்சினைகள் ஆகியவையே அவர்கள் இவ்வாறு பயிற்சிநெறிகளை இடைநிறுத்துவதற்கான காரணமாகும்.

இதனால் தொழில்நுட்பக் கல்லூரிகளில் அனுமதி பெறும் மாணவர்களின் தொகை குறைந்துவருகிறது. இதற்கான காரணங்களை தொழில்நுட்பக்கல்லூரி அதிபர்களுக்கு உணர்த்தும் நோக்கில் அண்மையில் கருத்தரங்கு ஒன்று நடாத்தப்பட்டது.

அதில் உரையாற்றும் போதே அமைச்சர் பியசேன கமகே இத்தகவல்களைத் தெரிவித்தார்.

நவீன இயந்திர சாதனங்களைப் பயன்படுத்தும் பயிற்சிநெறிகள் போதியளவு இல்லாமையும் தொழில்நுட்பக் கல்லூரிகளில் அதிக மாணவர்கள அனுமதி பெறாமைக்கு ஒரு முக்கிய காரணமெனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (க-7)

---

# வருடாந்த உற்சவம்

(பொன்னாலை)

பாலைதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இன்று திருப்பலி ஒப்புக்கொடுத்தலுடன் உற்சவம் நிறைவுபெறும். (க-49)

## யாழ்.மாவட்டத்தில் தொடர்ச்சியாக இடம்பெறும்

# இராணுவ வாகன விபத்துக்களுக்கான காரணத்தை இராணுவம் உடனடியாக மீளாய்வு செய்ய வேண்டும்

## சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி வலியுறுத்து



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இராணுவத்தினரின் கனரக வாகனங்களால் ஏற்படும் விபத்துக்களும், அதனால் ஏற்படும் உயிரிழப்புக்களும் நாளாந்தம் அதிகரித்து வருகின்றது. இது வாகனங்களில் உள்ள கோளாறா அல்லது பயிற்றப்படாத வாகனச் சாரதிகளின் கவனயீனமா என்பதை இராணுவம் உடனடியாக மீளாய்வு செய்யவேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

இது விடயம் தொடர்பில் அவர் விடுத்துள்ள பத்திரிகை அறிக்கையில்;

இராணுவ வாகனங்கள் பொதுமக்களை மோதுவதும், பொதுமக்கள் இராணுவத்திற்கெதிராக கிளர்ந்தெழுவதுமான சம்பவங்கள் அண்மைக் காலததில் அதிகரித்து வருவதை இராணுவம் உணர்ந்திருந்தால் தனது தவறுகளை அது திருத்தியிருக்கும். மரணித்துப் போபவர்கள் தமிழர் தானே என்ற சிந்தனையில் இராணுவம் இருப்பதால்தான் இவ்வாறான சம்பவங்கள் தொடர்கதையாக இருப்பதாகவும் ஐயுற வேண்டியுள்ளது.

யாழ்.குடாநாடு போன்ற சிறிய ஒரு பிரதேசத்தில் 35ஆயிரம் இராணுவத்தை வைத்து ஆக்கிரமித்துள்ள அரசாங்கம், அவர்களது தேவைகளுக்காக நூற்றுக்கணக்கான கனரக வாகனங்களையும் கொடுத்துள்ளது. ஆக்கிரமிப்பு இராணுவம் பொதுமக்களால் அந்நியப்படையாகவும், மக்கள விரோதப்படையாகவுமே பார்க்கப்படும்.

இந்நிலையில், விபத்துக்களால் பொதுமக்கள் மரணிக்கும் போது மக்கள் பொங்கி எழுவார்கள் என்பது சகஜமானதே. இதற்காக அப்பாவி பொதுமக்களைச் சுட்டுத் தள்ளுவதும், அவர்களை கண்மூடித்தனமாகத் தாககுவதும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது மாத்திரமல்ல கண்டிக்கப்படவேண்டியதுமாகும்.

நேற்றுமுன்தினம் யாழ்.நகரில் இடம்பெற்ற வேம்படி மகளிர் கல்லூரி மாணவி துளசிகாவின் மரணமும், அதன் பின்னர் ஏற்பட்ட சம்பவங்களும் இராணுவத்தின் அடாவடித்தனங்களையும், தமிழர் விரோத நிலைப்பாடடையுமே வெளிச்சம் போட்டு காட்டுகின்றன.

இராணுவத்தின் இச்செயற்பாடானது முழு மக்களையும் வீதியில் இறக்கிப் போராடவைக்கும் செயற்பாடாகும். அது மாத்திரமல்லாமல் கடந்த மூன்று வருட சமாதானச் செயற்பாடுகளையும், யுத்தநிறுத்தத்தையும் சீர்குலைத்து மீண்டும் யுத்தத்திற்குள் செல்லும் முயற்சியுமாகும்.

தமிழத் தேசியக் கூட்டமைப்பும், தமிழ் மக்களும் இராணுவத்தின் இம் மோசமான நடவடிக்கைகளை வன்மையாகக் கண்டிக்கின்றார்கள்.

இராணுவம் இனியாவது தன்னைத் திருத்திக்கொள்ள முயற்சிக்கட்டும். இல்லையேல் இராணுவத்திற்கெதிரான தொடர் போராட்டங்கள் தவிர்க்கமுடியாமல் போய்விடும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

# மக்களின் மனஉணர்வுகளைப் புரிந்து கொண்டு படையினர் நிதானத்துடன் நடந்திருக்கலாம்

## இப்படிச் செய்திருந்தால் வன்முறைகள் தணிந்திருக்கும் என்கிறார் பத்மினி எம்.பி



யாழ்.நகரப் பகுதியில் இராணுவ வாகனம் ஒன்று யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் ஆண்டு 7இல் படிக்கும் செல்வி துளசிகாவை மோதியதால் அவள் உயிர் பிரிந்துள்ளது. ஏற்கனவேயும் இதுபோன்று இராணுவ வாகனங்களால் மோதுண்டு பொதுமக்கள் இறந்த பல சம்பவங்கள் நடந்துள்ளன.

இத்தகைய சம்பவங்கள் தமிழ் மக்களை கோபமடையச் செய்துள்ளன. நேற்றைய சம்பவத்தில் ஒரு குழந்தையின் உயிர் பிரிந்தமையானது தமிழ்மக்களின், குறிப்பாக இளைஞர்களின் கோபத்தை பொறுமை காக்க முடியாத அளவிற்குத் தூண்டியது. இவ்வாறு யாழ்.மாவட்ட நடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா இராணுவத்தை தமிழ் மக்கள் ஆக்கிரமிப்பு இராணுவமாகவே கருகின்றார்கள். தமிழ் மக்களின் வாழ்விடங்களில் ஸ்ரீலங்கா இராணுவத்தின் பிரசன்னத்தை தமிழ் மக்கள் விரும்பவில்லை. ஸ்ரீலங்கா இராணுவம் தங்கள் நிலங்களை ஆக்கிரமித்து நிற்பதை ஒரு குற்றச் செயலாகவே தமிழ்மக்கள் கருதுகின்றார்கள். இத்தகையதொரு பின்னணியில் இராணுவ வாகனங்களால் பொதுமக்கள் விபத்துககுள்ளாவது, இறப்பது தமிழ் மக்களிடத்து ஒரு இயல்பான ஆத்திரத்தை கிளறிவிடுகின்றது. அந்த அத்திரத்தின் வெளிப்பாடாக அவர்கள் தெருக்களில் கூடி தமது எதிர்ப்பை வெளிக்காட்டுகின்றனர்.

தெற்கு அரசியல்வாதிகளின் பதவி மோகத்திற்கும், இனவெறிக்கும் பலியாகி தமிழ் நிலங்களுக்கு அனுப்பப்படுகின்ற இராணுவத்தினர் யுத்த நிறுத்தத்தை மனதில் கொண்டாவது சற்று நிதானத்தோடு நடந்திருககலாம மாறாக அவர்கள் இத்தகைய வேளைகளில் ஆத்திரமூட்டும் வகையில் நடந்துகொள்கின்றமையானது நிலைமையை மேலும் மோசமாக்கிவிடுகின்றது.

இராணுவத்தினர் கைகளில் ஆயுதங்களுடன் முகங்களை கறுப்புத துணியால் மூடிக்கட்டியபடி கவச வாகனங்களிலும், கால் ஓட்டமாகவும் தமிழ் மக்கள் கூடிநின்ற இடங்களைச் சூழ்ந்தமையும் கண்ணீர்ப்புகைப் பிரயோகமும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டமையும் தமிழ் இளைஞர்களை மேலும் கோபாவேசமடையச் செய்தது.

தெற்கு அரசியல்வாதிகள் தொடர்ந்தும் ஆக்கிரமிப்பு எண்ணத்தில் சீவிப்பதைக் கைவிட்டு மனித உரிமை, ஜனநாயகம் என்ற அடிப்படை மனித விழுமியங்களின் நிலைநின்று 'இனங்கள் சமத்துவமானவை' என்ற அடிப்படையில் இனப்பிரச்சினைக்கு ஒரு கௌரவமான தீர்வைக காண நேர்மையுடனும் அர்ப்பணிப்புடனும் முன்வரவேண்டும்.

இனங்களுக்கிடையே நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் வகையில் தமிழ்மக்களின் வாழ்விடங்களில் இருந்து ஸ்ரீலங்கா இராணுவம் உடனடியாக விலகி தமிழ்மக்கள் தம் இயல்பு வாழ்க்கையை வாழ்வதற்கு வழிவிடவேண்டும். தொடர்ந்து சுயநர்ணய உரிமையின அடிப்படையில தமிழ் மக்களின் அபிலாசைகள் அடையப்படுவதற்கான பேச்சுவார்த்தை விரைவில் இடம்பெற்று தீர்வு காணப்பட வேண்டும். இலங்கைத் தீவு அமைதியில் திளைப்பதற்கு இதுவே ஒரேயொரு வழி. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடும் இதுதான் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ப)

## கட்டாக்காலிகளால் பயிர்கள் நாசம்!

(பொன்னாலை)

வலி.மேற்குப் பிரதேசத்தில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லைகள் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றது என்று அப்பகுதி விவசாயிகள கவலை தெரிவிக்கின்றனர்.

நெல் அறுவடைக்குப் பின்பு அதிகளவான சிறுதானியச் செய்கைகள மற்றும் சுவைச் சரக்குப் பயிர்ச்செய்கைகளில் ஈடுபட்டுவரும் விவசாயிகள் தமது பயிர்களை இக்கட்டாக்காலிகள் சேதப்படுத்துவதாகக் கூறுகின்றனர்.

பொன்னாலை, வட்டுக்கோட்டை, அராலி, சுழிபுரம் ஆகிய பகுதிகளில் பயிர்ச்செய்கை பண்ணப்படும் பகுதிகளல் இக்கட்டாக்காலிகளின் நடமாட்டம் அதிகரித்திருப்பதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (க-49)

## 30 வணக்கஸ்தலங்கள் சுனாமியால் சேதம்

(முல்லைத்தீவு)

சுனாமிப்பேரலையின் போது முல்லைத்தீவில் 30 வணக்கஸ்தலங்கள், பாதிக்கபபட்டுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபரின் அறிக்கையில் தெரிவிக்கப்படுகிறது.

இதில் கததோலிக்க தேவாலயங்கள் 13, இந்துக் கோயில்கள் 16, பள்ளிவாசல்கள் ஒன்று என மதிப்பிடப்பட்டுள்ளது.

இவைகளுக்கான, சேதத்தின் மதிப்பீட்டுத் தொகையாக160 மில்லியன் எனக கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது. (க-128)

# ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பதவிக்கு இலங்கையும் போட்டியிடுமாம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பதவிக்கு போட்டியிடவுள்ளதாக இல்ங்கை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

அடுத்தவருடம் இப்பதவியிலிருக்கும் தற்போதைய செயலாளர் நாயகம் கொபி அனானின் பதவிக்காலம் முடிவடையும்போது அப்பதவிக்கு இலங்கை போட்டியிடவுள்ளது.

மதிப்புவாய்ந்த இராஜதந்திரியும, ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் ஆயுதப் பரிகரண விவகாரங்களின் முன்னாள் செயலாளர் நாயகமுமான ஜயந்த தனபால நாட்டின் வேட்பாளராகப் போட்டியிடவுள்ளார்.

இத்தகவலை வெளிவிவகார அமைச்சு சகல தூதரகங்களுக்கும் அறிவித்துள்ளது.

இலங்கைத் தூதரகங்கள் அமைந்துள்ள நாடுகளில், ஜயந்த தனபாலவை அந்நாடுகள் ஆதரிக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப்படவேண்டுமென்று வெளிவிவகார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

கடந்த டிசெம்பர் மாத பாராளுமன்ற கூட்டத்தொடரின் போது ஜயந்த தனபால இப்பதவிக்குப் போட்டியிடுவாரென தெரிவிக்கப்பட்டிருந்தது.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இதுதொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில், இலங்கையின் இராஜதந்திர சேவையில் நீண்டகாலம சேவையாற்றிய ஜயந்த தனபால ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் பணிபுரிந்தார்.

தற்போது ஸ்தம்பிதமடைந்துள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் சமாதானச் செயலகத்தின் தலைமைப் பதவியை அவர் வகிக்கின்றார்.

ஐ.நா.செயலாளர் நாயகமாக பர்மாவைச் சேர்ந்த ஒருவர் பதவி வகித்துள்ளார். அவரைத் தவிர்ந்த ஆசிய நாட்டவர் எவரும் இப்பதவியை வகிக்காததால் கொபி அனானைத் தொடர்ந்து ஆசிய நாட்டைச் சேர்ந்த ஒருவருக்கே இப்பதவி கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது எனத தெரிவித்தார்.

தற்போது இரு வேட்பாளர்களே இப்பதவிக்குப் போட்டியிடவுள்ளதாகத் தெரிவித்துள்ள போதும் மேலும் பலரும் போட்டியிடக்கூடும்.

இதற்கான இறுதித்தீர்வை பாதுகாப்புச் சபையின் 5 நிரந்தர அங்கத்தவர்களே முடிவு செய்வர். இவர்களுக்கு வீட்டோ அதிகாரம் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-7)

## மீன்பிடிக்குத் தேவையான உபகரணங்கள் மதிப்பீடு

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்கு மீனவர்கள் மீண்டும் தமது தொழிலை ஆரம்பிப்பதற்கு162 றோலர் படகுகள், 2ஆயிரத்து 794 படகுகள், ஆயிரத்து 580 கட்டுமரம், 2ஆயிரத்து 814 இயந்திரங்கள் என்பன தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது.

இதைவிட, நவீனமுறையில் மீன்பிடித் தொழிலை மேற்கொள்வதற்குக் குறைந்தது 100 மல்டிடே படகுகள் தேவைப்படுவதாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மதிப்பீட்டுப் புள்ளி விபரங்களை வடமராட்சி கிழக்கு சுனாமி அனர்த்த உதவிச் செயலகம் வெளியிட்டுள்ளது. (ற-43)

## பயிற்சி முடிவடைந்தது

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம், சாவகச்சேரி இந்துக கல்லூரி ஆகியவற்றில் நடைபெற்ற கணனிப்பயிற்சி வகுபபின் இறுதிப பாட்சை முடிவுகள் வெளியிடப்பட்டுவிட்டதாகவும் சான்றிதழ் வழங்கும் திகதி விரைவில அறிவிக்கப்படும் என்றும் முறைசாராக் கல்விப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ப-29)

## மின் விநியோகம்

பல வருடங்களாக மின்சாரம் வழங்கப்படாது இருந்த கசசாய் பகுதிக்கு சாவகச்சேரி மின்சார அத்தியட்சகரின் முயற்சியால் தற்போது மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

தற்போது பலாலி வரை மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. (ப-29)

# நேபாள முன்னாள் பிரதமர்களுக்கு வீட்டுக்காவல் இரு மாதங்களுக்கு நீடிப்பு

(காத்மண்டு)

நேபாளத்தில் முன்னாள் பிரதமர் இரண்டு பேர் உள்ளிட்ட ஆறு தலைவாகளின் வீட்டுக்காவல் மேலும் இரண்டு மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

நேபாளத்தில் மன்னராட்சியை ஒழிக்கக்கோரி மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் போராடி வருகின்றனர். அரச கட்டடங்களையும் இராணுவ முகாம்களையும் தகர்த்து நாசம்செய்து வந்த மாவோயிஸ்டுகளை ஒடுக்கத் தவறியதால் கடந்த மாதம் முதல் திகதி பிரதமர் ஷெர்பகதூர் துபா தலைமையிலான ஆட்சியை டிஸ்மிஸ செய்து அவசரநிலையை அறிவித்துளளாா் மன்னர் ஞானேந்திரா.

முன்னாள் பிரதமர்கள் கிரி ஜா பிரசாத் கொய்ராலா, ஷெர்பகதூர் துபா, நேபாள கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் மாதவ்குமார், பரத்மோகன, நேபாள மக்கள் முன்னணி கட்சித் தலைவர் அமிக்ஷெர்ஷான், நேபாள காங்கிரஸ் தலைவர் பூர்ணா பகதூர ஆகியோர் வீட்டுச் சிறையில் வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முந்தினத்தோடு இவர்கள வீட்டுக்காவல் முடிந்தது. இருப்பினும் ஞானேந்திரா அரசு, இவர்களது வீட்டுக்காவலை மேலும் இரண்டு மாதங்களுக்கு நீடித்துள்ளது. அவசர நிலை பிறப்பிக்கப்பட்டவுடன் நாடு முழுவதும உள்ள 450 தலைவர்களும், ஏராளமான தொண்டர்களும் சிறையில அடைக்கப்பட்டுள்ளனர்.

ஞானேந்திரா அரசின் சர்வாதிகாரப் போக்கைக் கண்டித்து நேபாள காங்கிரஸ் மத்திய குழு உறுப்பினர் பல்தேவ் சர்மா உள்ளிட்ட ஆறு தலைவர்கள் ஊர்வலம் நடத்த முயன்றனர். இதையடுத்து, இவர்கள் அனைவரும் கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்டனர். (ற)



இந்தியா - சீனா அணிகள் மோதும் டேவிஸ் கோப்பை டென்னிஸ் பந்தயம் நேற்று முதல் நடக்கிறது. போட்டிக்கான மோதல் விவகாரங்களைத் தேர்வுசெய்த இந்தியப் பிரதமர் வீரர்களுடன் புகைப்படம் எடுத்துக் கொண்ட காட்சி.

# உலகின் முதல் தொழில் நகரம்

(பாரிஸ்)

பண்டைக்காலத்து மெசபடோமியவில் இருந்த "மாரி" நகரம்தான் உலகின் முதல் தொழில் நகரம் என்று பிரெஞ்சு அகழ்வாராய்ச்சித் துறையினர் கண்டுபிடித்துள்ளனர்.

4ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய நகரம் 'மாரி' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள புத்தகத்தில், இன்றைய சிரியாவில் உள்ள இந்நகரம்தான் உலகின் முதல் நவீன நகரம் என்று ஜீன் க்ளாட் என்பவர் குறிப்பிட்டுள்ளார்.

25 ஆண்டுகால கடும் ஆய்வுக்குப் பின்னரே இந்த உண்மையை பிரெஞ்ச் அறிஞர்கள் வெளியிட்டுள்ளனர். பாலைவனம் சூழ்ந்த இந்தப் பகுதியில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இந்நகரம் எப்படி உருவாகியிருக்க முடியும் என்ற மர்மத்துக்கு இப்போது விடை கிடைத்துள்ளது.

1935ஆம் ஆண்டு இப்பகுதியில் இருந்து இஸ்தார் கோவிலும், மன்னர் லாக்மி மாரியின் சிலையும், அழகிய சிலைகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் மாரி பகுதியில் அந்தக் காலத்திலேயே உலோக பயன்பாடு இருந்திருக்கிறது. ஆயுத தளபாடங்கள் புழக்கத்தில் இருந்துள்ளன என்ற உண்மைகளை அகழ்வாராய்ச்சியினர் தெரிவித்துள்ளனர். (ற)

# பொங்கும் கடலோசை

(பெய்ஜிங்)

சீன மக்கள் தொகையில் 10 சதவீதம் பேர் காது இரைச்சல் நோயால் பாதிக்கப்படடுள்ளனர். இவர்களில் பெரும்பாலோனோர் இளைஞர்கள் மற்றும் நடுத்தர வயதினர்.

கடலலைகள் மோதுவது போன்ற இரைச்சல் காதுகளில் அடிக்கடி கேட்பதால் மற்ற ஒலிகளைத் தெளிவாகக் கேட்க முடியாமல் அவதியுறுவதாக இந்நோயால் பாதிக்கப்பட்டவர்கள் கூறுகின்றனர்.

கடுமையான மன அழுத்தத்தால் இந்நோய் ஏற்படுவதாக மருத்துவ நிபுணர்கள் கூறுகிறார்கள். காதுகளில் ஏற்படும் நோய் பற்றியும் காதுகளைப் பாதுகாத்துக் கொள்வது பற்றியும் விழிப்புணர்வு பிரசாரம் சீனாவில் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. (ற)

# எயிட்ஸ் மயமான எதிர்காலம்

# ஆபிரிக்காவில் நிலைமை படுமோசம்!

(எத்தியோப்பியா)

உரிய தடுப்பு நடவடிக்கைகள் எடுக்காவிட்டால் ஆபிரிக்காவில் எய்ட்ஸ நோயால் 2025ஆம் ஆண்டுக்குள் சுமார் 8 கோடி பேர் மரணமடைவார்கள் என்று ஐ.நா ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

எயிட்ஸ்நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 9 கோடியாக உயரும் என்றும் அந்த அறிக்கை கூறுகிறது.

இதுவரை ஆபிரிக்காவில் 2.5 கோடி பேர் எய்ட்ஸால் பாதிக்கபட்டுள்ளனர். ஆபிரிக்காவின் எதிர்காலம் அக்கண்டத்தில் எய்ட்ஸ் தடுப்புப் பணிகளுக்கு சர்வதேச சமூகம் உதவும் அளவைப் பொறுத்தது என்றும, எயிட்ஸ் நோயால் ஏற்படப்போகும் கடுமையான பாதிப்பை இனிமேல்தான் ஆபிரிக்கா உணரப்போகிறது என்றும் ஐ.நா அறிக்கையில் மேலும தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் சமய அறிவுப் போட்டி முடிவுகள்

(நேற்றைய தொடர்ச்சி)

## தரம் I

### மாணவர்களுக்கான நீதி நூல் மனனப் போட்டியில் சிறப்புப் பரிசு பெறுவோர்

ஜெ.ஆரபி, ஜோன் பொஸ்கோ வித்தி. ர.புஸ்கரணி, மானிப்பாய் சத்தியசாயி வித்தி. சு.டிற்சிகா, யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை. இ.யதுர்ஷனா, அச்சுவேலி புனித தெரேசாள் மகளிா கல்லூரி. சி.டர்சிகா, வண். நாவலர் மகா வித்தி. ஜெ.சுபாசினி, வண். நாவலர் மகா வித்தி. செ.ரேகா, யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை. ஜெ.துலக்ஷிகா, யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை. சி.சஜிதா, யாழ். இந்து ஆரம்ப பாடசாலை. க.தேவந்தி, யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை. மோ.சாத்வீகன், யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை.

அ.அகீபன், யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை. சு.திலக்ஷி, யாழ். இந்து ஆரம்ப பாடசாலை. சி.சாம்பவி, யாழ் இந்து ஆரம்ப பாடசாலை. இமாதினி, யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை. த.தக்ஷயன், யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை. க.சிவசொரூபி, யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை. வி.கௌதமி, யாழ். இந்து ஆரம்ப பாடசாலை. சோமதுசன, யாழ். இந்து ஆரம்ப பாடசாலை. பா.ஆதிரை, சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

வி.லக்சாங்கிதன, யாழ்.இநது ஆரம்ப பாடசாலை. தஜீவதாரணி, யாழ் இந்து ஆரம்ப பாடசாலை. ந.கோபிகிருஸ்ணா, கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை. வை.கலாதரன், புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி. ப.யாழினி, புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக கல்லூரி. வி.ஆரூரன், புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி. ர.சிந்துஜன், அச்சுவேலி மத்திய கல்லூரி. கு.கஜலக்ஷன், அச்சுவேலி மத்திய கல்லூரி. சி.சிவலோஜினி, அச்சுவேலி மத்திய கல்லூரி. சி.குணமேகலா, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி. உ.பிருந்தா, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி. சோ.சுகன்யா, நயினாதீவு ஸ்ரீகணேச கனிஷ்ட மகா வித்தி. ச.பிரிந்திகா கோப்பாய் நாவலர் வித்தி. சி.பிரவீன், ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் வித்தி. செ.கேதாகரன், யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை.

## தரம் II

### மாணவர்களுக்கான நீதி நூல் மனனப் போட்டியில் சிறப்புப் பரிசு பெறுவோர்

மோ.ஆகாஷ், யாழ்.மத்திய கல்லூரி. ந.சாளினி, புனித ஜோன் பொஸ்கோ வித்தி. ச.காவியா, யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை. ப.கேமிலா, யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை. நா.பிரசாந்தி, யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை. உ.டிலோஷனா, யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை. நி.பிரியங்கா, ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் வித்தி. இ.பிரவீணா, ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் வித்தி. ஜெ.நிவேதினி, ஆனைபபந்தி மெதடிஸ்த மிஷன் வித்தி. த.சர்விகா, கோண்டாவில் இந்து மகா வித்தி. தி.சங்கீதா, அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி.

ம.மதுசாளினி, அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி. ச.சிவப்பிரியன், அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி. க.சங்கீத், அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி. ம.பிரசாந்தி, வண். நாவலர் மகா வித்தி. ப.சரணியா, நயினாதீவு, ஸ்ரீ நாகபூசணி வித்தி. நநடனசபேசன், நீர்வேலி அத்தியர் இந்துக கல்லூரி. த.வர்ணிகா, நீர்வேலி அத்தியர் இந்துக் கல்லூரி.

மு.நீருஜன்,யாழ்இந்து ஆரம்ப பாடசாலை. க.பிரதிப், யாழ். இந்து ஆரம்ப பாடசாலை. வி.ஜதுசன், யாழ். இந்து ஆரம்ப பாடசாலை. ப.நிக்சன், யாழ்இந்து ஆரம்ப பாடசாலை. ச.நிசாந்தன், யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை. சி.ஜெயசக்தி, யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை. கே.கஜலக்ஷி, யாழ்இந்து ஆரம்ப பாடசாலை. கி.புஸ்பாஞ்சலி. யாழ். இந்து ஆரம்ப பாடசாலை. ஆ.அங்கவை, யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை. ச.ஜனரஞ்சனி, யாழ். இந்து ஆரம்ப பாடசாலை. ஜெ.மதுஷாரா, யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை. மோ.சௌமியா, யாழ்இந்து ஆரம்ப பாடசாலை. இ.உதயபவன், யாழ்இந்து ஆரம்ப பாடசாலை. சிபராபரன், யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை. வி.ஜானுகா, யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை..

ரா.லிங்காயீசன், புனித ஜோன் பொஸ்கோ வித்தி. சு.லாவண்யா. பெரியபுலம் மகா வித்தி. உ.கோபிநாத், கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை. வெ.கனிஸ்ரன, கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை. ப.மதிவதனி, கொக்குவில் இந்து ஆரம்ப பாடசால்லை. அ.அஜநதநாத், கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை. மோ.கோகுலன், கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை. தெ.ஜெனனி, கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை. ம.கவிப்பிரியா, கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை. பி.துலக்ஷா, கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை. சி.திலக்ஷனா, கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை. உ.லக்சிகா, கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை.

கு.திவ்யா, நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட மகா வித்தி. ந.திலகஷிகா, புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி. இ.கஜனி, அச்சுவேலி மத்திய கல்லூரி. கி.ஜனனி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி. கு.ரிஷானி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி. மு.ஹம்சாயினி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி. மோ.பவதாரணி, மானிப்பாய் மகளிர் கல்லூரி. அ.தர்சனா, மானிப்பாய் மகளிர் கல்லூரி. ம.தரண்யா, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி. கி.கேதுகா, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி. ம.பிரியவர்மன், கோப்பாய் நாவலர் வித்தி..

வ.விதுர்சன், கோப்பாய் நாவலர் வித்தி. த.ஆர்த்தி, கோப்பாய் நாவலர் வித்தி. இ.சர்மிளா, கோப்பாய் நாவலர் வித்தி. ச.பிரியந்தி, கோப்பாய் நாவலர் வித்தி. சூடிவித்தா, தம்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலை. (ற)

# விரும்பிய மதத்தை பின்பற்ற புதிய சட்டமூலம் தயாரிப்பு

(கொழும்பு)

விரும்பிய மதத்தைப் பின்பற்றுவதற்கான உத்தரவாதத்தை வழங்கும் சட்டமூலத்திற்கான நகலுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கயுள்ளதாக புத்தசாசன அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா தெரிவித்துள்ளார்.

இந்நகல் சட்டமூலம் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. மக்களின் வறுமையைப் பயன்படுத்தி மதமாற்றங்கள் இடம் பெறுவதாகவும் அமைச்சா தெரிவித்தார்.

புண்ணிய கிராமத்திட்டத்தின் இரணடாவது கட்டத்தை அங்குரார்ப்பணம் செய்துவைப்பதற்காக நேற்று முன்தினம் ஜோன் டி சில்வா ஞாபகார்த்த அரங்கில் நடைபெற்ற வைபவம் ஒனறில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்விபரங்களைத தெரிவித்தார்.

ஜனாதிபதியின் யோசனைக்கு அமைய ஒழுங்குசெய்யப்பட்ட இத்திட்டத்தின் கீழ், நாட்டிலுள்ள சகல மத்ஸ்தாபனங்களிலும் அபிவிருத்திக்காக, கணனிகள் மற்றும் தகவல் தொடர்பு உபகரணங்களை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

இதன்மூலம் கிராமப்புறங்களில் உள்ள அனைத்து மத ஸ்தாபனங்களையும் அபிவிருத்தி நிலையங்களாகப் பயன்படுத்தக்கூடியதாக இருக்கும் என்றார். (க-7)

# திருமலையில் சட்ட விரோதக் குடியேற்றம்; புளொட் அமைப்பு கடும் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

திருகோணமலை நகரில் திட்டமிட்ட சட்டவிரோதக் குடியேற்றம் ஒன்றை ஏற்படுத்த முனைந்த நிகழ்வை தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) வன்மையாகக் கண்டித்துள்ளது.

இதுவிடயம் குறித்து புளொட் இயக்கம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில்,

திருகோணமலை நகரசபைக்கு உரித்தான மைக்ஹெய்ஸர் விளையாட்டரங்கை அண்டிய பகுதிகளில் திட்டமிட்ட சட்டவிரோத குடியேற்றமொன்றை நிறுவ சில இனவாத சக்திகள் முயன்றுள்ளன.

காலங்காலமாக இவ்வாறான இனவாத நோக்குடனான குடியேற்றங்கள், அரசினால் ஊக்குவிக்கப்பட்டு எமது மண்ணில் இடம்பெற்று வந்தமையும் இதனால் இனங்களுக்கிடையே சந்தேகங்கள் வலுத்து நல்லுறவுகள் பாதிக்கப்பட்டதுடன் தமிழ் மக்களை தமது வாழ்வுரிமைகளுக்காக போராடத் தூண்டியதென்பதும் வரலாறு.

விடுதலைப்போராட்டம் ஆரம்பிக்கப்பட்டதற்கான காரணங்கள் அப்படியே இருக்க இவ்வாறான இனவாத போக்குடைய செயற்பாடுகள் தொடர்வதானது இன ஐக்கியத்தையும சக வாழ்வையும் மேலும் சீரழிக்கவே செய்யுமென்பதை சம்பந்தப்பட்டோர் உணரவேண்டும்.

இவ்விடயத்தில் அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து நகரின் அமைதிச்சூழலைப் பேணவேண்டுமென நாம் வலியுறுத்துகிறோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

# கற்றல் உபகரணங்கள் வழங்கி உதவி

(பொன்னாலை)

சுனாமியால் பாதிக்கப்பட்ட 50 மாணவர்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் கற்றல் உபகரணங்களை வழங்கியுள்ளது.

தும்பளை புனித அந்தோனியார் ஆலயத்தில் தங்கியிருக்கும் 50 மாணவர்களுக்கே மேற்படி உபகரணங்களை தமிழர் புனர்வாழ்வுக்கழகம் வழங்கியுள்ளது. (க-49)

# காசோலைகள் வந்துள்ளன

சாவகச்சேரி சுகாதார அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட பகுதிகளில் மலசலகூடம் கட்ட நிதிக்கு விண்ணப்பித்த பயனாளிகளுக்குரிய காசோலைகள் வந்துள்ளதாக சுகாதார பணிமனை வட்டாரங்கள் அறிவித்துள்ளன. (க29)



'குருதேவா'
ஜெய் ஆகாஷ் - ப்ரணதி

## பார்த்திபன் நடிக்கும் 'கர்த்தா'

சுந்தரி பிலிம்ஸ் சார்பில் பிரபு - கார்த்திக் நடிக்கும் 'குஸ்தி' படத்தைத் தயாரிக்கும் எம்.ஞான சுந்தரி இதைத் தொடர்ந்து தயாரிக்கும் மிகப் பிரமாண்டமான படம் 'கர்த்தா'.

இதில் பார்த்திபன் கதாநாயகனாக நடிக்கிறார். கதாநாயகிகளாக இரண்டு முன்னணி கதாநாயகிகள் நடிக்கின்றனர். முக்கிய வேடங்களில் வடிவேலு, ராஜ்கர், சித்ரா லட்சுமணன் டி.பி.கஜேந்திரன் உட்பட முன்னணிக் கலைஞர்கள் பலர் நடிக்கின்றனர்.

இந்தப் படத்துக்கு ராஜரத்னம் ஒளிப்பதிவு செய்கிறார். கதை, திரைக்கதை வசனம் எழுதி ஜே.வி. ஆர்.சுப்ரமணியன் இயக்குகிறார்.



## பெயரைத் தக்...

நடிகர் சிலம்பரசன் ஒரு தயாரிப்...
பந்தமாகி இருக்கிறாராம். இந்தப் படம்...
பெயரைத் தக்கவைத்துக்கொள்ளும் வே...
மூன்று நாயகிகள், கல்லூரி, காதல் என...
சொல்ல, தயாரிப்பாளருக்கு இருப்புக்கொ...
ஷூட்டிங்கைத தொடங்கிவிடுங்கள்' என...
சரித்துக் கொண்டிருக்கிறாராம்.

## இரட்டைச் சகோதரிகள் அறிமுகமாகும் 'நினைக்காத நேரமில்லை'



'நட்சத்திர நாயகன்', 'கட்டாய கல்யாணம்', 'நல்ல மனசுகாரன்' ஆகிய படங்களைத் தயாரித்த ஆர்.எஸ்.நாதன், பொள்ளாச்சி பத்மநாபன் ஆகிய இருவரும் இணைந்து தயாரிக்கும் புதிய படம் 'நினைக்காத நேரமில்லை'.

இந்தப் படத்தில் ரம்யாஸ்ரீ, ரமாஸ்ரீ அகிய இரு கதாநாயகிகள் அறிமுகமாகிறார்கள். இவர்கள் ஒன்றாகப் பிறந்த இரட்டையர்கள்.

அக்காள், தங்கைகள் படங்களில் நடிப்பது சகஜம். ஆனால் இரட்டைச சகோதரிகள் ஒரே படத்தில் கதாநாயகிகளாக அறிமுகமாவது தமிழ்த் திரையுலகில் இதுவே முதல்முறை.

ரம்யாஸ்ரீயும், ரமாஸ்ரீயும் சென்னை அண்ணாநகரில் உள்ள ஒரு பள்ளியில் பிளஸ் -2 படிக்கிறார்கள். இவர்கள் 'நினைக்காத நேரமில்லை' படத்தின் தயாரிப்பாளர் ஆர்.எஸ்.நாதனின் மகள்கள்.

இருவருக்கும் சினிமாவில் நடிக்க நீண்டநாள் ஆசை இருந்ததாம். இதனால் சொந்தப் படத்தில் மகள்களைக் கதாநாயகிகளாக்கிவிட்டார் நாதன்.

கதாநாயகனாகப் புதுமுகம் ஒருவர் நடிக்கிறார்.

ராஜீவ், ராஜேஷ, தாமு, சிசர் மனோகர், ஜெய்சூர்யா காந்த்ஜி, சண்முகசுந்தரம், கலைராணி, தேஜாஸ்ரீ, ஷகிலா ஆகியோரும் நடிக்கிறார்கள்.

## சிம்பு இயக்கிய 'பி.எப்'


பெயர் சர்ச்சையில் சிக்கியிருக்கும் 'பிஎப்' படத்தின் ஷூட்டிங் சென்னை பழைய மகாபலிபுரம் சாலையில் உள்ள கோல்டன் பீச்சில் நடந்துவருகிறது. அன்றும் வழக்கம்போல கதாநாயகி நிலா உட்பட நடிகர், நடிகைகள், டெக்னிஷியன்கள் எல்லாம் செட்டில் ஆஜராகிவிட்டார்கள். ஷொட் தொடங்க வேண்டிய நேரத்தில் திடீரென வந்து கமரா முன்பு நின்று 'ஓகே டேக் போகலாம்' என்று சொன்னவரைப் பார்த்து யூனிட்டுக்குப் பயங்கர ஆச்சரியம்... அன்றைய காட்சிகளை இயக்கியது படத்தின் இயக்குனர் எஸ்.ஜே.சூர்யா இல்லை. அவரது நண்பரான ஹீரோ சிம்பு!

'மன்மதன்' படத்தில் நிழல் இயக்குனராக இருந்த சிம்புவைத் தன படத்தில் சில காட்சிகளை இயக்கித் தரும்படி எஸ்.ஜே.சூர்யா அழைப்பு விடுக்க... அதற்காக வந்து இயக்கிக் கொடுத்திருக்கிறாராம் சிம்பு.




'இப்படிக்கு என்காதல்'
காலைரவி - தனுஜா


## டிப்டாப் சூ...



'கஜினி...
பணக்கார...
நடிக்கிற...
அ...
த்துவதற்...
சென்னை...
கோஷ்டிக...
பாடுபடுத்...
கஜினி...
முயற்சி செ...
தியது போ...
விடாது ...
வது கார்...

உலகின் 5 முன்னணிப் பணக்காரர்களில் ஒ...
டிப்டாப் ஆசாமியாக வலம்வருகிறாராம்.

இளையராஜா இசை அமைப்பில் உருவாகும்...
விரைவில் தயாராகிறது. இந்தப் படத்தை அவ...
பாவலர் வரதர்ராஜனின் மகன் வி.ஹோமோஷோ...
திரைக்கதை, வசனம் எழுதி இயக்குவார் என்...



'காட்பாதர்'
அஜித், அசின்

# சினிமாச் சிதறல்

அந்நியன் படத்தில் சிபிஐ அதிகாரியாக வருகிறார் விவேக். படம் முழுவதும் வந்து கலக்கும் சூப்பர் ரோல் செய்திருக்கிறேன் என்கிறார் விவேக்.

* * *

பெப்ரவரி 14 படத்தில் ஒரே பாடலுக்காக ஏவிஎம் ஸ்டூடியோவில் 6 செட்டுகள் போட்டுள்ளார் ஆர்ட் டைரக்டர் ராஜீவன். இதற்கான செலவு ரூபா 40 லட்சமாம்.

# 'வரப்போகும் சூரியனே'

திவ்யஷேத்ரா பிலிம்ஸ் சார்பில் சி.ஆர்.ராஜன் தயாரிக்கும் பிரமாண்டமான படம் 'வரப்போகும் சூரியனே'. இதில் புதுமுகம் த்ரிவிக்ரம் கதாநாயகனாக நடிக்க, ஆந்திராவைச் சேர்ந்த ப்ரியாஞ்சலி கதாநாயகியாக நடிக்கிறார். மற்றும் சீதா, தெலுங்கு முன்னணி குணச்சித்திர நடிகர் ஆகுதி பிரசாத், துரைப்பாண்டி, அஞ்சலிதேவி, சத்தியப்பிரியா, ரமேஷ் கண்ணா, கவுதமி, தேவன், பாலு ஆனந்த், அஜய்ரத்னம், திவ்யா உட்பட பலர் நடிக்கின்றனர்.

ஒவ்வொரு தந்தையும் மகனை எப்படி வளர்க்கவேண்டும்? ஒவ்வொரு மகனும் தந்தையை எப்படி மதிக்கவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துகின்ற இந்தப் படம், விரைவில் திரைக்கு வருகிறது.

இந்தப் படத்துக்குக் கதை, திரைக்கதை, வசனம் எழுதி எஸ்.கே.சாமி இயக்குகிறார்.

# ...த் தக்... வைக்க!

...ஒரு தயாரிப்பாளரின் புதிய படத்தில் ஒப்... இந்தப் படம் மூலம் தனக்குக் கிடைத்த ...கொள்ளும் வேலைகளில் இறங்கியிருககிறாராம். ...ரி, காதல் என இளமையான கதையை நடிகர் ...கு இருப்புக்கொள்ளவில்லையாம். 'சீக்கிரமே ...டுங்கள்' எனத் தயாரிப்பாளர் நடிகரை நச் ...றாராம்.

# கவர்ச்சியாக நடிக்க எப்போதும் தயார் – நடிகை ஸ்ரீதேவி



தமிழ்ச் சினிமா பற்றி நடிகை ஸ்ரீதேவியிடம் நிருபர்கள் கேட்டபோது, அவர் கூறியதாவது,

சினிமாவுககுக் கவாசசி என்பது தேவைதான். நிஜ வாழ்க்கையில் செய்ய முடியாத பல கனவுகளை சினிமாமூலம் செய்யமுடிகிறது. ஒரு சில படங்களில் கதைக்கு தேவைப்படி கவர்ச்சி காட்டப்படுகிறது.

ஒரு சில படங்களில் கதைக்குத் தேவை இல்லாமலும் கவர்ச்ச' காட்டுகிறார்கள். இது தயாரிப்பாளர்களின் விருப்பத்துக்கு இணங்க நடக்கிறது. இதைத் தவிர்க்க முடியவில்லை.

இப்போது உள்ள படங்களில் அதிகம் கவர்ச்சி இருப்பதாகச் சொல்லமுடியாது. கதைக்கு ஏற்றபடி கவர்ச்சி வேடத்தில் நான் நடிக்க எப்போதும் தயார்.

மும்பையில் இருந்து வரும் நடிகைகளைப் போல் தமிழ் நடிகைகள் புகழ் பெற முடியவில்லை என்ற கருத்தை ஏற்றுக்கொள்ளமுடியாது. அவர்களுக்கும் ஏதோ ஒரு திறமை இருகககத்தான் செய்கிறது.

தமிழ்ப்படங்களுக்கு ஆங்கிலப் பெயர்கள் வைக்கக்கூடாது என்று அரசியல் தலைவர்கள் சிலர் கூறிவருகிறார்கள். இது ஆரோக்கியமானதாகத் தெரியவில்லை. இது கலையைப் பாதிக்கும். கதைக்கு ஏற்றபடி தமிழ்ப்படத்துக்கு ஆங்கிலப் பெயர் வைப்பதில் தவறில்லை. இது என் தனிப்பட்ட கருத்து.

சிறுவயதிலிருந்தே நான் சினிமாவில் நடித்துவருகிறேன். சிறுவயதில் எனக்கு சாக்லெட் வாங்கிக் கொடுப்பார்கள். அதைச் சாப்பிட்டுக்கொண்டே சொல்றபடி நடிப்பேன். இப்போது என் தனித்திறமையை வெளிப்படுத்தவேண்டும் என்று நடிப்பதால் கொஞ்சம் பயமாகவே இருக்கிறது.

நான் நடித்த 'தேவதையைக் கண்டேன்' படத்தில் கடைசிக காட்சியில் ரசிகர்கள் வெறுக்கும்படி நடித்ததாகக் கூறுகிறார்கள். ஏன் இப்படி நடித்தர்கள்? என்று கூட சிலர் கேடடார்கள். எந்த ஒரு கரக்டர் என்றாலும் என்னால் நடிக்க முடியும் என்றுதான் அப்படி நடித்தேன். அப்போதுதான் நடிப்புத் திறமையை வெளிப்படுத்த முடியும் என்றார்.



'லண்டன்'
பிரசாந்த்
அங்கிதா

'தகதிமிதா', 'அந்த நாள் ஞாபகம்', 'நீயே நிஜம்', 'சொல்லி அடிபபேன்', 'அது ஒரு கனாக்காலம்'என ஏகப்பட்ட படங்களில் பிஸியாக நடித்துக்கொண்டிருக்கிறார் தேஜா ஸ்ரீ.

# உதவும் மனம்

ஜெயம் ரவி நடிப்பில் மட்டும் பிரகாசமில்லை. கொடைத் தன்மையிலும் பிரகாசிக்கிறார்.

சமீபததில் பேரழிவு ஏற்படுத்திய சுனாமி நிவாரணப் பணிகளில் அதிக ஆர்வம் காட்டிய ரவி பாதிக்கப்பட்டவர்களுக்குப் பல்வேறு உதவிகளை இப்போதும் செய்துவருகிறாராம்.

சமீபத்தில் ஒரு தொண்டு நிறுவனத்தோடு சோந்து மீனவர்களுக்கு ரூபா 10லட்சம் செலவில் வலை வாங்கிக்கொடுத்திருக்கிறாராம்.



கனாக் கண்டேன்
கோபிகா

# ...ப் சூர்யா



'கஜினி'யில் உலகின் டொப் 5 பணக்காரர்களில் ஒருவராக சூர்யா நடிக்கிறார்.

அமைதியான வாழ்க்கை நடத்துவதற்காக மும்பையிலிருந்து சென்னைவரும் அவரை வில்லன் கோஷ்டிகள சூழ்ந்துகொண்டு படாத பாடுபடுத்துகிறார்களாம்.

கஜினி முகம்மது இடைவிடாது முயற்சி செய்து வில்லன்களை வீழத்தியது போல வில்லன்களை இடைவிடாது முயற்சி செய்து வீழ்த்துவது ...ந்தப் படத்தின் கதையாம். ...காரர்களில் ஒருவர் என்பதால் சூர்யா ...ராம்.

...ில் உருவாகும் 1000 ஆவது படம் வெகு... படத்தை அவரது அண்ணன் மறைந்த ...வி. ஹோமோஷோ என்கிற ஜோ கதை, ...யக்குவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

# மெகா வசனத்தால் கிடைத்த சபாஷ்!

குட்லக் தியேட்டரில் கருணாநிதிக்காக 'மண்ணின் மைந்தன்' ஸபெஷல் ஷோ திரையிடப்பட்டது.

படம் பார்த்து முடித்ததும் சிபியை அழைத்து முதுகில் தட்டிக்கொடுத்த கருணாநிதி, 'இப்போ உள்ள நடிகர்களெல்லாம் நீண்ட வசனங்களை எங்கே பேசப போகிறாாகள் என்று நினைத்தேன்.

ஆனால் நீ ஒரே டேக்கில் பேசி முடித்தாயாமே என்று பாராட்டுத் தெரிவிக்க....

மனுஷன் இப்போ யார் அவரிடம் பேசினாலும் இந்தப் பாராட்டு பத்திரத்தை வாசித்து முடித்தபிறகு தான் மற்ற விஷயங்களையே பேசுகிறாராம்.



அழுதே...
மதுமிதா - ஜெய் ஆகாஷ்

# நல்லெண்ணம் கொண்ட உள்ளமே கடவுளால் என்றும் விரும்பப்படும்

## பரமபிதா காட்டிய பாதை



இவ்வுலகிலே வாழும் எம் ஒவ்வொருவருக்கும் பலவிதமான பொறுப்புக்கள் தரப்பட்டுள்ளன. அப்பொறுப்புக்களைச் சிறப்பாக நிறைவேற்ற வேண்டுமென்றே மேற்பார்வை செய்பவர்கள் விரும்புவார்கள். அவ்வாறு செய்யப்படாதவிடத்து செயற்பாடாமைக்கான காரணங்களைக் கண்டறிந்து அப்பொறுப்புக்களைத் தகுதி வாய்ந்த வேறு ஒருவருக்குக் கொடுத்து மீண்டும் சிறப்பாக நடாத்தப்படவேண்டும் என்றே நடவடிக்கை மேற்கொள்வர். இவ்வாறுதான் மக்களிடமிருந்து தெரிந்து கொள்ளப்பட்ட இஸ்ரேயேலின் முதலாவது அரசன் சவுல், இறை பிரமாணிக்கமற்றவனாக நடந்து கொண்டதினால அவனை விடுத்து; தாவிது என்ற சிறுவன் இறைவனால் தெரிந்து கொள்ளப்பட்டு சாமுவேல் இறைவாக்கினரால் அருள் பொழிவு செய்யப்படுகின்றார் என்பதை வேத நூலின் சாமுவேல் ஆகமம் முதல் முத்தகத்தின் மூலம் நாம் அறிந்து கொள்கின்றோம்.

### இறைவன் விரும்பும் வாழ்வு வாழ

இறைவன் முகத்தையல்ல அவர் ஒவ்வொருவரின் அகத்தையே பார்க்கின்றார். வலிமையையோ, முப்பையோ, வேறும் எநதத் தகைமையும் ஆணடவர் பார்ப்பதில்லை நல்ல உள்ளத்தையே விரும்புகிறார். பாவத்தையல்ல, பாவியை இறைவன் நேசிக்கிறார். பணக் காரர்களையல்ல, ஏழைகளை இறைவன் விண்ணகத்தின் உாிமையாளர்கள் என்று கூறியுள்ளார். இருளின் செயல்களையோ, அச்செயல்களைச் செயகின்றவர்களையோ இறைவன் வெறுக்கிறார். ஒளியின் மக்களாக நற்செயல் செய்யவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றார். இருளின் செயல்கள் பாவமானவை, தீமை தருபவை, அழிவைத் தருபவை, அருவெருக்கத் தக்கவை என்று எச்சரிக்கின்றார். நன்மை, நீதி, உண்மை ஆகிய நற்செயல்களால் மலரும் மகிழ்ச்சியே நிலை வாழ்வுக்கு எம்மை ஈடேற்றும் என்றருளினார். பொல்லாத காலங்களின் நாட்களுக்குள் நாம் புடமிடப்பட்ட பொன்னாக மிளிரவேண்டும் ஆண்டவருக்கு உகந்தவராக வாழ வேண்டும்.

### சமுதாயத்துக்கு பயனுள்ள வாழ்வு

எம்முடைய செயல்கள் சமுதாயத்துக்கு பயன் உள்ளவையாக, சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள வளர்ச்சித் தடைகளைக், களைகின்றவைகளாக, எடுத்துக்காட்டான முன்மாதிரிகையான வழிகாட்டிகளாக வாழும் பொழுது சமுதாயத்தை நாம் ஒளியின் பாதையில் வழிநடத்துகின்றோம். இல்லையெனில் இயேசு கூறியதுபோல் குருடன் குருடனுக்கு வழிகாட்ட முடியுமா? இருவரும் குழியில் விழவேண்டி ஏற்படும். அதே போல் வழிகாட்டும் நாமும் சமூகமும் குருட்டுச் சமுகமாகவே அக இருள்நிறைந்ததாகவே காணப்படும்.

எமது குருட்டுத் தனங்கள் மறைந்து ஒளியிலே நாம் வாழும் போது சமுகத்துக்கு பயன் உள்ளவர்களாக வாழமுடியும். ஓய்வு நாளிலே இயேசு நன்மை செய்ததையே பரிசேயர்கள் குறை கண்டார்கள். அதாவது குருடனுக்குப் பார்வை அளித்ததே அவர் செய்த நற்காரியம். பிறவியிலிருந்து குருடனாக வாழ்ந்தவன் மெசியாவாகிய இயேசுவை விசுவசித்தான் அவன் ஒளியைக் கண்டுகொண்டான். நாமும் இயேசுவைக் கண்டு கொள்ளவேணடும் என்றால், எம் அக இருள்கள எல்லாம் நீக்கப்படவேண்டும்.

### உகந்த வாழ்வை மேற் கொள்வல்

தவககாலத்தின் நான்காம் வாரத்துக்குள் பயணிக்கும் நாம். பாிசுத்தவாரத்துள் நுழைந்து இயேசுவோடு பாடுகள் மரணம், உயிர்ப்பிலும் கலந்து, எம்வாழ்வில் ஒளிபெற, ஆசிபெற, அருள்பெற எமக்கு கிடைத்துள்ள காலத்தை முற்றும் பயனுள்ள தாக்குவோம் தவத்தில் அருளின் மூலம் மகிமை வாழ்வுக்குள் பிரவேசிக்க எம் சிந்தனை, சொல், செயலில் தூய்மையும், வாய்மையும் கடைப்பிடிப்போம். அடுதது கெடுத்து ஆயிரம் இலட்சமாகச் சம்பாதித்து ஆன்மாவை இழந்து விடாமல், கொடுத்து, மகிழந்து குவலயத்திலே நிலை வாழ்வின் முன்சுவையை அனுபவிப்போம். அயலவர்களுக்கு பணிபுரிந்து ஆண்டவனுக்கு உகந்த பிரார்த் தனைகளை ஒப்புக்கொடுப்போம் இறையருள் வேண்டியே தினம் பொழுதைக் களிப்போம். □

**அன்ரனி பீற்றர்**

## நிர்வாகிகள் தெரிவு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஸ்ரீ பழனி சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவு சங்கத்தின நடப்பு வருடத்துக்கான புதிய நிர்வாகத்தினர் அண்மையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவராக பெ.சண்முகநாதனும, உபதலைவராக பு. மனுநீதியும, செயலாளராக பரிமளம் வைத்திலிங்கமும் பொருளாளராக விமலாம்பிகை விவேகானந்தனும் தெரிவு செய்யப்பட்டனர். (க-29)

## அதிபர்களுக்கான கலந்துரையாடல்

(பொன்னாலை)

தென்மராட்சிக கல்வி வலய அதிபர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 9ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் சகல அதிபர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (க-49)

## மஹோற்சவம்

(பொன்னாலை)

கச்சேரி - நல்லூர் வீதி பாணன் குளம நாச்சியம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 15 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 15 தினங்கள உற்சவம் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 26 ஆம் திகதி இரதோற்சவத் திருவிழாவும் மறுநாள் 27 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது.(க-49)

## சிவராத்திரி தினவிழா

கோண்டாவில் கிழக்கு பொற்பதி வீதி சிவமஹாகாளி அம்பாள் ஸ்ரீ காசி ஈஸ்வரர் தேவஸ்தானத்தில் மஹாசிவராத்திரி தின விழா எதிர்வரும் 8ஆம் திகதி நடைபெறவுள்ளது.

அன்றைய தினத்தில் தியானம், பஜனை, பிரசங்கம் கலை நிகழ்ச்சிகள் என்பனவும் இடம் பெறவுள்ளது. (க-130)

# உதை பந்தாட்டம் நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். உதைபந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் 'உதை பந்தாட்டம்' எனும் நூலின் வெளியீட்டு விழா எதிர்வரும் 9 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி கேட்போர் கூடத்தில் இடம்பெறவிருக்கின்றது.

யாழ்.மாவட்ட உதைபந்தாட்டச் சங்கத்தலைவரும் விளையாட்டு விற்பன்னருமான டேவிட தம்பிராஜா இந்நூலை எழுதியுள்ளார். உதைபந்தாட்டத்திற்கான கைநூலாகவும் இது அமைந்துள்ளது.

யாழ்.மத்திய கல்லூரி அதிபர் லயன் கே.ராஜதுரை தலைமையில் நடைபெறவுள்ள இந்நூல் வெளியீட்டு விழாவிற்கு, பிரதம விருந்தினராக யாழ். மாவட்டச செயலர் கே.கணேஷ் கலந்து கொள்வார்.

கௌரவ விருந்தினர்களாக யாழ்.மாவட்ட இலங்கை வங்கி உதவி முகாமையாளர் கே.பால சுப்பிரமணியம், யாழ்.உதை பந்தாட்ட லீக் தலைவர் எஸ். அந்தோனிப்பிள்ளை, விளையாட்டுத்துறை உத்தியோகத்தர் றோகான் ராஜசிங்கம், விடுதலைப்புலிகள் இயக்க விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கே.பாப்பா, வட-கிழக்கு மாகாண முனனாள் விளையாட்டமைச்சின பணிப்பாளர் மரியதாஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நூல் வெளியீட்டுரையை கப்டன் டீ.ஏ.எம்.குணசிங்கமும், ஆய்வுரையை கே.யந்துகுலசிங்கும் நிகழ்த்துவர்.

இறுதியில் டேவிட் தம்பிராஜா நூல் ஆசிரியர் உரையை நிகழ்த்துவார். (க-7)

# சிவராத்திரி விழாவன்று நாட்டின் பல பாகங்களிலும் விசேட பூஜை வழிபாடுகள்!

(யாழ்ப்பாணம்)

இந்தவருடம் சிவராத்திரி விழாவை இலங்கையில் சகல பாகங்களிலும் கொண்டாடுவதுடன், திருக்கேதீஸ்வர ஆலயத்தில் விமரிசையாக கொண்டாட இந்து சமய கலாசார அமைச்சினால் நடவடிககைகள் எடுக்கப்பட்டுளளன.

இந்து சமய அலுவல்கள் அமைச்சின் அனுசரணையுடன் யாழ்ப்பாணம், கீரிமலை, நகுலேஸ்வரம், மன்னார், திருக்கேதீச்சரம், திருகோணமலை, திருக்கோணச்சரம், மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரம், புதுக்குடியிருப்பு புதுநகர் சிவன் ஆலயம், புதுக்குடியிருப்பு கந்தசுவாமி ஆலயம், வவுனியா கோயிற்குளம் ஆகிலாண்டேஸ்வரர் ஆலயம், நுவரேலியா இலங்காதீஸ்வர ஆலயம், புத்தளம் மானாவெளி சிவன் ஆலயம், இரத்மலானை, திருநந்தீஸ்வர ஆலயம் ஆகிய ஆலயங்களில் விசேட பூஜை வழிபாடுகளுடன் சிவராத்திரி அனுட்டானங்கள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

திருக்கேதீச்சர ஆலய மகா சிவராத்திரி விழாவிற்கு இந்தியாவிலிருந்து சிவாச்சாரியார்கள் வரவிருப்பதுடன் கலைமாமணி, திருமுறைக்கலாமணி திருப்பனந்தாள் சோ.முத்துக்கந்தசாமி தேசிகரின் பண்ணிசை நிகழ்ச்சியும், தேவார இசைமணி திருமுறைச் செல்வர் திருப்பனந்தாள் ஜி.நல்லசிவத்தின் பண்ணிசை நிகழ்ச்சியும் இடம்பெறவுள்ளன.

திருக்கேதீச்சர ஆலயத்தில் இடம்பெற இருக்கும் சிவராத்திரி விழாவை முன்னிட்டு பக்தர்களின் போக்குவரத்து வசதிக்காக அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவின் கோரிக்கைக்கு இணங்க உயிலங்குளம், ஓமந்தை, முகமாலைச் சோதனைச் சாவடிகள் மக்களுக்காக திறந்துவைக்கப்படவுள்ளன.

கடற்கோளினால் பாதிப்புற்றுள்ள இலங்கைத்தீவின் எல்லாப் பகுதிகளிலும் உள்ள இந்து ஆலயங்களில் சிவராத்திரி தினத்தன்று, மத அனுட்டானங்களும், பண்ணிசை, பஜனைகளும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

# ஜனாதிபதி சந்திரிகா அமைச்சர்களுடன் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கையின் தடைப்பட்டுள்ள சமாதான முயற்சிகளை மீள ஆரம்பிக்கும் முயற்சிகள் தொடர்பில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முக்கிய சந்திப்பு ஒன்று நடத்தியுள்ளார்.

அமைச்சர்கள் லக்ஷ்மன் கதிர்காமர், மங்கள சமரவீர மற்றும் ஜனாதிபதியின் ஆலோசகர் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சந்திப்பு தொடர்பில் தகவல் திணைக்களம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. இந்த அறிக்கையில் இனப் பிரச்சினைக்காக நிரந்தரத் தீர்வு ஒன்றை ஏற்படுத்தும் முயற்சியின் ஒரு அங்கமாகவே இடைக்கால நிர்வாக சபை ஒன்றை அமைப்பது குறித்து பேசுவதற்கு அரசாங்கம தயாராக இருப்பது என்று குறிப்பிடப்படுகின்றது.

இரண்டு மணிநேரம் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் சமாதான முயற்சிகள் குறித்து ஜே.வி.பி.யின் நிலைப்பாடு தொடர்பில் ஜனாதிபதியிடம் அமைச்சர்க்ள் எடுத்து விளக்கி இருப்பதாகவும் இதனை அடுத்தே ஜே.வி.பி.யினரை திருப்திப்படுத்தும் நோக்கில் அரசாங்கம் இந்த அறிக்கையை வெளியிட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது. (ற-9)

# பி.மா.சு.சே. பணிப்பாளராக ஆறுமுகம் கேதீஸ்வரன் நியமனம்

(சுதுமலை)

யாழ்ப்பாணம் பிராந்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக நியமிக்கப்பட்ட டாக்டர் ஆறுமுகம் கேதீஸ்வரன் கடந்த முதலாம் திகதி தொடக்கம் உத்தியோகபூர்வமாகக் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

யாழ்.மாவட்டத்திற்கு பல வருடங்களின் பின்பு நிரந்தரமான சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் நியமிககப்பட்டுள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

வவுனியா மாவட்டத்தில் நானகு வருடங்கள் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியாகவும், இரண்டரை வருடங்கள் வவுனியா மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராகவும் கடமைபுரிந்து பல சுகாதார அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்திய பெருமை இவருக்கு உண்டு.

இதேவேளை, யாழ்ப்பாண மாவட்டத்திற்கு தாய் சேவ நல வைததிய அதிகாரியாக வைத்தியகலாநிதி சொலமன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் பல வருடங்கள் யாழ். போதனாவைத்தியசாலையில் குழந்தைகள் நல வைத்திய அதிகாரியாக கடமை புரிந்தவராவர்.

மேற்படி வைத்திய அதிகாரி மந்திகை அரசினர் வைத்தியசாலை மற்றும் பருத்தித்துறை, கோப்பாய் சுகாதாரவைத்திய அதிகாரி பணிமனைகளிற்கு விஜயம் செய்து அடிப்படை வசதிகள் மற்றும் தேவைகள் குறித்து பொறுப்புவைத்திய அதிகாரிகளுடன் கலந்துரையாடியுள்ளார். (க-252)

# இன்று ஒரு தகவல்

## அற்புதங்களின் ஆதாரம்

ஒரு ஊரை ஒட்டியது போல் ஒரு ஆறு ஓடிக் கொண்டிருந்தது. அந்த ஆற்றுக்கு அடுத்த கரையில் ஒரு காடு இருந்தது. அந்தக் காட்டின் நடுவே உள்ள ஒரு ஆசிரமத்தில் ஒரு குரு இருந்தார். அந்தக் கிராமத்தில் பால் வியாபாரம் செய்து கொண்டிருந்தார் ஒரு பெண்மணி. ஆசிரமத்தில இருந்த அந்தக் குருவுக்கும் தினமும் பால் கொண்டு போய்க் கொடுப்பது இவர்தான் வேளா வேளைக்கு சரியாகக் கொண்டுபோய் கொடுப் பார்.

ஒரு முறை அந்த ஆற்றில் வெள்ளம் அளவுக்கதிகமாக ஓடிக்கொண்டிருந்தது.அதனால படகுப் போக்குவரத்து கொஞ்சம் தாமதப்பட்டது. இவரால் சரியான நேரத்தில் ஆசிரமத்திற்குப் போய்ச் சேர முடியவில்லை. அந்தக் குருவுக்கு கோபம் வந்துவிட்டது. "வேளா வேளைக்கு ஒழுங்காக வருவதில்லையே ஏன் இப்படி?" என்று கோபித்துக கொண்டார். "நான் என்ன செய்வது? தினமும் பொழுது விடிவதற்கு முன்பே வீட்டை விட்டு கிளம்பிவிடுவேன். இருந்தாலும் அந்த ஆற்றங்கரையில் வந்து காத்துக் கிடக்க வேண்டியுள்ளதே. ஓடக்காரன் வந்து சேருவதற்கு நீண்டநேரமாகி விடுகிறது" என்றார் அந்தப் பெண்மணி.

இதைக் கேட்ட அந்தக் குரு சிரித்துக் கொண்டே "என்ன இப்படிச் சொல்கிறாயே! பகவானின் நாமத்தை உச்சரித் துக கொண்டே பலர் பிறவி என்ற பெருங்கடலையே தாண்டி விடுகிறார்கள். நீ என்னவோ இந்த சிறிய ஆற்றைக் கடப்பதற்கு ஓடக்காரனை நம்பிக் கொண்டி ருக்கிறேன் என்கிறாயே " என்றார். கள்ளங் கபடமில் லாத அந்தப் பெண்மணி இதை அப்படியே நம்பினார். ஆற்றைக் கடப்பதற்குச் சுலபமான வழி அவருக்குத் தெரிந்துவிட்டது.

அடுத்த நாளிலிருந்து அந்தக் குருவுக்கு காலா காலத்தில் பால் கிடைத்தது. அவர் ஒருநாள் அந்தப் பெண்ணைப் பார்த்துக் கேட்டார்." இப்போதெல்லாம் நீ உரிய நேரத்திற்கு பால் கொண்டு வந்து தருகிறாயே அது எப்படி?" என்றார்."நீங்கள் தானே சுவாமி அதற்கு வழி சொல்லிக் கொடுத்தீர்கள்" என்றார் அவர். " என்ன வழி சொல்லிக் கொடுத்தேன்" என்று கேட்டார் குரு. "இப்போதெல்லாம் நான் அந்த ஓடக்காரனுக்காக காத்துக் கொண்டிருப்பதில்லை. பகவானின் நாமத்தை சொல்லிக் கொண்டே ஆற்றைக் கடந்து வருகிறேன்" என்றார் அந்தப் பெண்மணி.

சுவாமி வழி சொல்லிக் கொடுத்தாரே தவிர "அது எப்படி ஆண்டவனின் பெயரைச் சொன்னால் ஆற்றின் மீது நடக்க முடியும்?"என்ற சந்தேகம் அவருக்கு. " என்னைக் கொஞ்சம் அழைத்துக் கொண்டு போய் நேரில் காட்டு" என்றார். இருவரும் அந்த ஆற்றங்கரைக் குப் போய்ச் சேர்ந்தார்கள்.

ஆண்டவனின் பெயரைச் சொல்லிக் கொண்டே. அந்தப் பெண்மணி சர்வசாதாரணமாக தண்ணீர் மீது நடந்து போக ஆரம்பித்தார். கொஞ்சத் தூரம் போன பின்பு திரும்பி சுவாமியைப் பார்த்தார். இவர் காலை வைத்தால் அது தண்ணீருக்குள் போகிறது. மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருந்தார்." என்ன இது? நானும் பகவானின் நாமத்தைத் தான் சொல்கிறேன். என்னால் நீர்மேல் நடக்க முடியவில்லையே" என்றார் குரு.

அதற்கு அந்தப் பெண்மணி"சுவாமி என்ன இது? பகவானின் நாமத்தை வாயால் சொல்கிறீர்கள்.ஆனால் அதேநேரம் துணி நனைந்து விடுமோ என்ற பயத்தில் அதைக் கையால் தூக்கிப் பிடித்துக் கொண்டிருக்கிறீர்களே! அப்படியென்றால் உங்களுக்கு பகவானிடத்தில் பரிபூரண நம்பிக்கை இல்லையா?" என்றார். அதன் பின்பு தான் அந்த வெகுளிப் பெண்மணி சொன்ன வார்த்தையின் அர்த்தம், தத்துவம் அந்த சுவாமிக்கு விளங்க ஆரம்பித்ததாம்.

தீவிரமான நம்பிக்கை,பரிபூரண சரணாகதி இது தான் அற்புதச் செயல்களுக்கு ஆதாரம் என்பதைப் புரிந்து கொள்வதற்காக இந்தக் கதையை ராமகிருஷ்ணர் சொல்லியிருக்கிறார்.

இந்தக் கதையைக் கேட்ட இந்தக் காலத்து குடும்பஸ்தர் ஒருவர் "எங்கள் குடும்பத்தில் சண்டை சச்சரவே இதுவரைக்கும் வந்ததில்லை சார். அதற்குக் காரணமும் நான் கடைப்பிடிக்கும் இதே தத்துவம் தான்" என்றார். "அது என்ன தத்துவம்?" என்று கேட்டேன்." பரிபூரண சரணாகதி" என்றார் அவர்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# ஓர் இனம் தன் தாயகத்தை இழக்குமானால் அவ் இனம் வேரோடு சாய்க்கப்படுவது உறுதி

## மா.க.ஈழவேந்தன் எம்.பி.

(யாழ்ப்பாணம்)

**திருமலை தமிழீழத்தின் தலைநகர். இது தமிழரின் முடிந்த முடிவு. இம் முடிவை மாற்ற முயல்வோரின் முயற்சி முறியடிக்கப்படும்.**

**திருமலையில் ஜே.வி.பியின் ஆதரவுடன் சிங்களக் குடும்பங்களை குடியேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. எனினும் இந் நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தாமல் பொலிஸார் வேடிக்கை பார்த்தது தமிழர்களைக் கடும் சீற்றத்துடன் கொதித்தெழ வைத்துள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன்.**

திருமலையில் சிங்களக் குடியேற்றத்தை ஏற்படுத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் குறித்து மா.க.ஈழவேந்தன் எம்.பி. விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

திருகோணமலை நகரத்தில் பேருந்து நிலையம், மணிக்கூட்டு கோபுரம், மீன்சந்தை ஆகியவற்றுக்கு பக்கத்தில் கடற்கரை ஓரமாக உள்ள நகரசபைக்குச் சொந்தமான கரையோரக் காணிகளில் சட்ட விரோதமாக சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்வதற்கு, கடந்த புதன்கிழமை இரவோடு இரவாக ஜே.வி.பியினரால் முயற்சிகள் எடுக்கப்பட்டன.

ஜே.வி.பியின் ஆதரவோடு மேற்கொள்ளப்படும் இந்தத் திட்டமிட்ட சிங்களக் குடியேற்ற நிகழ்ச்சிகளை தடுத்து நிறுத்தாமல் பொலிஸார் வேடிக்கை பார்த்தது, தமிழர்களைக் கடும் சீற்றத்துடன கொதித்தெழ வைத்திருக்கின்றது.

திருமலை நகரத்தில் மணிக்கூட்டு கோபுரத்திற்கும் கோணேசர் கோயில் அமைந்துள்ள பிரட்ரெக் கோட்டையின் முன்புறத்திற்கும், இடையில் உள்ள கடற்கரையோரப் பகுதியிலேயே இப்பொழுது திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றத்திற்கு வெறிப்போக்கில பெரு முயற்சி நடைபெறுகின்றது.

இக கடற்கரையோரப் பகுதி திருகோணமலை காளி கோயில் தீர்த்தப்பகுதி என்பன உள்ள பிரதேசமாகும. இந்திய அமைதிப்படை திருமலையில் குடிகொண்டிருந்த போது புற்றுக்குள் இருக்கும் பாம்பு போல பதுங்கி இருந்த இராணுவத்தினர் இந்தியப்படை வெளியேறியதை அடுத்து சிங்கள அரசுகளின் துணையுடனும் சிங்கள இராணுவத்தின் துணையுடனும் இந் நகர மண்ணில் பலாத்காரமாகக் குடியேறி இங்கு வாழ் தமிழ் மக்களை வேரோடு சாய்த்து வெளியேற்ற வெறியாட்டங்கள் பலவற்றைச் செய்துள்ளன.

ஆழிப்பேரலை அனர்தத்தால் இப்பகுதியில் இருந்த குடிசைகள் அள்ளிச் சென்றதை அடுத்து கடற்கரையோரத்தில் 100 மீற்றர் தூரத்தில் வீடுகள் அமைக்க அனுமதி இல்லை என அரசு முடிவு எடுத்ததையடுத்து இப்பகுதியில் சட்டவிரோத சிங்களக் குடியேற்றத் தொல்லை நீங்கியது என தமிழர் நிம்மதியாக வாழ முனைந்தபோது தான் மேற்குறித்த சிங்கள வெறியாட்டம் நடைபெற்றுள்ளது.

ஜே.வி.பி.யின் இச்செயலுக்கு திருமலை நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த விஜயசேகரவே தலைமை தாங்குகின்றார். அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுகளின் ஆதரவுடன் நடைபெற்ற சிங்களக் குடியேற்றத்தின் விளைவுதான் திருமலை நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த விஜயசேகர திருமலையில் பிறக்க வழிசெய்தது. அத்தோடு இவ் வெறியாட்டத்திற்கு தலைமை தாங்கும் இவர் ஆயிரமாயிரம் ஆண்டுகள் திருமலை மண்ணில் வாழ்வுகண்ட தமிழ் மக்களை வெளியேற்றுகின்ற கொடூரச் செயலையும் மேற்கொள்கின்றார்.

உலகின் தலைசிறந்த இயற்கைத் துறைமுகமான திருகோணமலையை எவன் வைத்திருக்கின்றானோ அவன் இந்து மகா பெருங்கடலின் திறவுகோலை வைத்திருக்கின்றான் என்று 19ஆம் நூற்றாண்டில் பிரிததானியப் பேரரசின் தலைமை அமைச்சராக விளங்கிய பெருந்தகை வெலிங்டன் கூறிய கூற்றாகும்.

எனவே தான் எம் மறைந்த சிந்தனைச் சிப்பி கதிரவேற்பிள்ளை "கொழும்பை இழ, திருகோணமலையைப் பெறு" என்று கூறிய கருத்தினை நினைவு கொண்டு திருமலையை ,எம் தமிழீழத்தின் தலைநகரை எத்தகைய விலை கொடுத்தும் காப்பாற்ற உறுதி பூணவேண்டும்.

எனினும்,கிழக்கின் குறிப்பாக திருகோணமலை மாவட்டத்தின் தமிழ்க் குடிமக்கள் இன்னும் இவற்றை உணராமல் இருப்பது எமக்கு வியப்பைத் தருகின்றது. வடமாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்டம் 6337 போராளிகளையும் ,வன்னி மாவட்டம் 2462 போராளிகளையும்,முல்லைத்தீவு மாவட்டம் 1252 போராளிகளையும், மன்னார் மாவட்டம் 1015 போராளிகளையும் என மொத்தமாக 11,064 போராளிகள் விடுதலைக்கு வித்தாகியுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்கள் 6418 போராளிகளை களத்தில் இழந்திருக்கின்றன. தமிழ் ஈழத்தில் மிகவும் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் திருகோணமலை முன்னிலை வகிக்கினறது. இந்த இழப்புக்கள் எமக்கு இடித்துரைக்கும உண்மைகள் என்ன? ஒரு இனம் எதனையும் இழக்கலாம், மீண்டும் வாழ்வு பெறலாம் ஆனால் ஒரு இனம தன் தாயகத்தை இழந்துவிட்டால் அந்த இனம் வேரோடு மண்ணோடு சாய்க்கப்படும். எம் மண்ணைக் காக்க நாம் போராளிகளைப் புதைக்கவில்லை மாறாகப் போராளிகளை விதைத்துளளோம். இதை நாம் உணர மறுப்பின் வரலாறு எம்மீது வசைபாடும் என அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

## கொடிகாமத்தில் குழு மோதல் மூவர் யாழ். வைத்தியசாலையில்

(சாவகச்சேரி)

கொடிகாமத்தில் கடந்த வியாழக்கிழமை இடம் பெற்ற இரு குழுக்களுக்கிடையிலான மோதலில் காயமடைந்த கொடிகாமம் பெரியநாவலடியைச் சேர்ந்த ம. கமலநாதன்(வயது-20) மற்றும் த.பிரபாத் (வயது-19) ஆகியோர் சாவகச்சேரி வைத்தியசாலையில் இருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இதேவேளை இம் மோதல் சம்பவத்தின் எதிரொலியாக நேற்று முன்தினம் பருத்தித்துறை வீதியைச் சேர்ந்த தம்பிஐயா இராசேந்திரம்(வயது-57) வாள்வெட்டுககு இலக்காகி கை மற்றும் தலையில் பலத்த காயதுடன சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டபின் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டார்.

நேற்றுமுன்தினம் கொடிகாமத்தில் இதனால் பெரும் பதற்றம் நிலவியது இதனையடுத்து நகரத்தில் பொது மக்களைக் கலைப்பதற்கு படையினரும் பொலிஸாரும எச்சரிக்கை வேட்டுக்களைத் தீர்த்தனர்.கடைகள் பூட்டப் பட்டு வெடிச்சோடிக் காணப்பட்டன. அத்துடன், கொடிகாமம் நகரத்தில் நேற்று முன்தினம் பொலிஸாரும் படையினரும் காவல் கடமைகளில் ஈடுபட்டுள்ளனர்.(க-29)

## நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லப்படும் கைதிகளை பரிசோதிக்க நடவடிக்கை

(கொழும்பு)

சிறைச்சாலைகளிலிருந்து விசாரணைக்கென நீதிமன்றங்களுக்கு கைதிகளை அழைததுச் செல்லும் போது கடும் பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கான வேலைத திட்டங்களை நடைமுறைப்படுத்த நீதியமைச்சு தீர்மானித்துள்ளது.

சிறைச்சாலைகளிலிருந்து நீதிமன்றங்களுக்கு கைதிகளை அழைத்துச் செல்லும்போது சிறைச்சாலை பஸ் வணடிக்குள் ஏற்றுவதற்கு முன்னர் சிறைச்சாலை அதிகாரிகளினால் அவர்கள் முறையாக சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றார்களா? என்பது குறித்து ஆராய வதற்கு விசேட திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் எம்பிலிப்பிட்டிய நீதிமன்ற வளாகத்தில இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தின்போது அழைத்து வரப்பட்ட கைதிகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டார்களா என்ற அறிககையை அமைச்சு கோரியுள்ளது. (ற-8)

## கி.உத்தியோகத்தர்களுக்கான இடமாற்றம் இடைநிறுத்தம்

(பொன்னாலை)

வலி-மேற்குப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள கிராம உத்தியோகத்தர்களுக்கான இடமாற்றம் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

பல கிராமங்களில் 10 வருடங்களுக்கும் மேலாக கடமைபுரிந்து வரும் கிராம உத்தியோகத்தர்கள் குறித்து பொதுமக்கள் பிரதேச செயலரின் கவனத்திற்கு கொண்டு வந்ததையடுத்து இடமாற்றம் ஏற்படாகியிருந்தது.

இதன்படி அரச அதிபரின் அனுமதியுடன் இடமாற்றத்தை நடைமுறைப்படுத்துவதற்கு பிரதேச செயலா சி.ஏ.மோகனறாஸ் நடவடிக்கை எடுத்ததுடன் இம் மாதம் முதலாம் திகதி முதல் இடமாற்றம் வழங்கப்படும் எனவும் அறிவித்திருந்தார்.

இறுதியில் அரச அதிபரின் பணிப்புரையின் படி அந்த இடமாற்றம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக் கப்படுகிறது. (க-49)

## தமிழ்மொழி மூலம் அனுமதி அட்டை அடுத்த வாரம் முதல் வழங்கப்படும்

(கொழும்பு)

இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் வங்கிகளில் வேலைக்கு அமர்த்துவதற்காக நடாத்தப்படும் துணை உத்தியோகத்தர் பயிலுனருக்கான போட்டிப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் தமிழ் மாணவர்களுக்கு சிங்கள மொழியில் அனுப்பப்பட்டமைக்கு பதிலாக சரியான கடிதம் அடுத்தவார முற்பகுதியில் அனுப்பி வைக கப்படுமென இலங்கை பரீட்சை ஆணையாளர் நாயகம தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்தப் பரீட்சைக்கு வண்ணப்பித்தோருக்காக அனுப்பி வைக்கப்பட்ட அனுமதி அட்டைகளில் பரீட்சை மொழி மூலம் சிங்க ளம் என குறிப்பிடப்பட்டிருந்தமையைச் சுட்டிக்காட்டி பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் அனுப்பியுள்ள கடிதம் தொடாபாகவே பரீட்சை ஆணையாளர் டபிள்யூ ஏ.எம். விஜயசிறி இம் மாற்றம் குறித்து அறிவித்துளளார்.இந்தப் போட்டிப் பரீட்சை எதிாவரும் 12ஆம் திகதி நடாத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-8)

# நிவாரணப் பொருட்களுக்கான சுங்கத் தீர்வை நீக்கம்

(கொழும்பு)

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்கு என உலகின் பல நாடுகளிலிருந்தும் அனுப்பி வைக்கப்பட்ட நிவாரணப்பொருட்கள் அனைத்திற்குமான சுங்கத் தீர்வையினை அரசாங்கம் நீக்கியுள்ளதாக அறிவித்துள்ளது.

நிவாரணப்பொருட்களுக்கான சுங்கத் தீர்வையினை அரசாங்கம் விதித்ததையடுத்து நிவார்ணப் பொருட்களை பொறுப்பேற்க சம்பந்தப்பட்டவர்கள் தயக்கம் காட்டி வந்தமையே இத்தடை நீக்கத்திறகான காரணமாக இருக்கலாம் எனத் தொிவிக்கப்படுகின்றது.

அரசாங்கத்தின் சுங்கத் தீர்வை அறிவிததலையடுத்து பெருமளவான நிவாரணப் பொருட்கள் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் தேங்கியிருந்தன. அதனை உடனடியாக அகற்றுவதற்காகவே இப்பொருட்களுக்கான சுங்கத் தீர்வையினை அரசாங்கம் நீக்கியுள்ளதாக அறிவித்துள்ளது.

நிவாரணப்பொருட்களுக்கான் சுங்கத்தீர்வை நீக்கமானது எதிர்வரும் எப்ரல் மாதம் 26 ஆம் திகதி வரை மட்டுமே அமுல்படுத்தப்படும் என்றும், அதனைத் தொடர்ந்து சுங்கத்தீர்வை அறவிடப்படும் என்றும் அரசாங்கம் அறிவித்துளளது.

(ற)

# கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

இன்று ஞாயிற்றுக்கிழமை நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரனின கட்டடப்பிராய் அலுவலகத்தில் நடைபெறவிருந்த கோப்பாய் தொகுதி அபிவிருத்தி தொடர்பான கூட்டமும் நிகழ்கால அரசியல் நிலை தொடர்பான கலந்துரையாடலும் தவிர்க்கமுடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டம் இன்னொரு திகதியில் வைக்கப்படுமென்பதையும், இது தொடர்பாக மிக விரைவில் அறிவிக்கப்படுமென்பதையும் தமிழத் தேசியக் கூட்டமைப்பின் அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்வதாக சுரேஷ் பிறேமச்சந்திரன் எம்.பி அறிவித்துள்ள்ர்.

(ற)

# சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு அவசர நிதியுதவி

ஆழிப்பேரலை அனர்த்தத்திற்குள்ளான இலங்கைக்கு அவசர நிதியுதவியாக சர்வதேச நாணய நிதியம் 15 கோடி 75 லட்சம் அமெரிக்க டொலர்களை வழங்க முன்வந்துள்ளது.

இந்தத் தகவலை சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் வெளியிட்டுள்ளார். அவரது தகவலின்படி ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மாலைதீவிற்கு 63 லட்சம் அமெரிக்க டொலர்கள் வழங்கப்பட்டிருந்தது.

(ற)

# புளொட் உறுப்பினர் மீது மட்டு.இல் துப்பாக்கிச் சூடு

(மட்டக்களப்பு)

மடடக்களப்பு நகரில் நேற்று முற்பகல் 9.30 மணியளவில் புளொட் உறுப்பினரொருவர் இனந்தெரியாத நபர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயங்களுடன் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கோவிந்தன் வீதியிலுள்ள மக்கள வங்கிச் சந்தியில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. மட்டக்களப்பு நகரிலிருந்து சைக்கிளில் தனது அலுவலகத்திற்கு சென்று கொண்டிருந்த சமயம் மோட்டார் சைக்கிளில் வந்த நபரொருவர் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. காயமடைந்த கணேஸ் எனப்படும் சந்திவெளியைச் சோந்த கந்தையா கணேசராசா என்ற இந்நபர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளார்.

(ற)

# ஊழியர் பலி

(முல்லைத்தீவு)

சுனாமி பேரழிவின் போது முல்லைத்தீவு மாவட்டத்தில் அரசாங்க அதிபர் அறிக்கையின்படி 10 அரச ஊழியர்கள் பலியாகியுள்ளனர்.

(ப-128)

## மீள்குடியமர்த்தல் குறித்து ஆராய

# கிளி.இல் 10 ஆம் திகதி உயர் மட்ட மாநாடு

(திருநெல்வேலி)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை மீளக் குடியமர்த்தல் தொடர்பாகவும் அவர்களை மூன்றாம் கட்டமாக நிரந்தரமாக குடியமர்த்துதல் தொடர்பாகவும் இறுதி முடிவுகளை எடுக்கும் உயர் மட்ட மாநாடு ஒன்று எதிர்வரும் 10ஆம் திகதி வியாழக்கிழமை கிளிநொச்சியில் இடம்பெறவுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் திட்டமிடல் செயலகப் பணிப்பாளர் தூயவன இதனை அறிவித்துள்ளார்.

இச் சந்திப்பில் கலந்து கொள்ளுமாறு உதவி வழங்கும் நிறுவனங்கள்,கொடையாளிகள்,தொண்டு நிறுவனத் தலைவர்கள் மற்றும் பொது அமைப்புகள் என்பவற்றிற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ற-43)

# "ஆண்டவரே என் ஆயர் எனக்கேதும் குறையில்லை"

பகட்டான உடை உடுத்தி, நகைகள் அணிந்து வரும் பணக்காரர்களை நாம் மதிக்கின்றோம். இல்லங்களில், வீடுகளில் தங்க வைத்து மரியாதை செய்கின்றோம். ஏழைகளை அவமதிக்கின்றோம். நிந்திக்கின்றோம். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் தூய யாக்கோபு எழுதிய திருமட லில் நாம் வாசிக்கும் அதே நிகழ்வு



இன்றும் தொடர்கி றது. 'ஏழைகள் பாவிகள் அல்ல' என்ற புதியப் பார்வை நமக்கு வேண்டும். பரிசேயர்களைப் போல கண்ணிருந்தும் குருடர்களாய் வாழாமல் விசுவாசப் பார்வை பெறுவோம். விசுவாசக் கண்ணுடையோர், உடல் வாழ்க்கைக்கு அப்பாற்பட்ட ஆனம வாழ்வின் அந்தரங்களை மட்டுமன்றி, மந்திர தந்திரங்களுக்குக் கட்டுப்படாத கடவுளையே அறிந்தும் உணர்ந்தும் கொள்கின்றன. நம்மில் விசுவாசக் கண்களைத் திறந்துவிட்டு அவற்றிற்கு ஒளி ஊட்ட வந்தவரே இயேசு கிறிஸ்து. நாம் திருமுழுக்கு பெற்றபோது இயேசுவின் ஒளி நம் விசுவாசக் கண்களைத் திறந்து

## தவக்காலச் சிந்தனை

விட்டது. சாமுவேல் தாவீதின் மேல் எண்ணெய் தடவி அவரைத் திருப்பொழிவு செய்ததை போலவும் (1சாமு 16:13), இயேசு தன் உமிழ்நீர் தடவி குருடருக்குப் பார்வை அளித்தது போலவும் (யோவா 9:6), நம்மீதும் நமது திருமுழுக்கின்போது திரு எண்ணெய் தடவி திருச்சபை நம் விசுவாசக் கண்களைத் திறந்து விட்டு, நம்மை ஒளியின் பிள்ளைகளாகப் பெற்றெடுத்தாள். புனித பவுலடியார் உரைப்பது போல, திருமுழுக்கு பெறுமுன் இருளாய் இருந்த நீங்கள் இப்பொழுது ஆண்டவருக்குள் ஒளியாய் இருக்கிறீர்கள் (எபேசி 5:8), ஆகவே நாம் ஒளியின் மக்களாக வாழ்ந்திட வேண்டும்.

எல்லா மனிதரிடமும் இறைவனைக் கண்டு அவர்களை நம் சகோதர சகோதரிகளாகப் பாவிக்க முடியுமென்றால், நம் ஒளியின் மக்கள்ளு நன்மைக்கும் உண்மைக்கும், நீதி நேர்மைக்கும் நம்மை அர்ப்பணித்து, அவற்றை அன்றாட வாழ்வில், அல்லல்களுக்குத் தயங்காது, வீரமுடன் பின்பற்றி வாழ்ந்தால், நாம் ஒளியின் மக்கள் தமது சொந்த குற்றங்குறைகளைக் காண கண்ணைத் திறக்காது, பிற வாழ்வில் மட்டும் குறைகளைக் காண்பதால், தான் என்னும் தற்செருக்குற்று ஏனையோரை ஏளனமாக நடத்துவோர் இருளின் மக்களே அன்றி ஒளியின் மக்கள் அல்லர்ளு நாம் யார்? இருளின் மக்களா, ஒளியின் பிள்ளைகளா என்பதை கிறிஸ்துவின் தீப ஒளி முன் நின்று கண்டுணர்வோம்.

காவலன்

# துபாய் ஓபன் டெனிஸ் காலிறுதியில் ஜெலினாவிடம் வீழ்ந்தார் சானியா

துபாய் ஓபன் டெனிஸ் போட்டியின் காலிறுதியில் செர்பிய வீராங்கனை ஜெலினா ஜான்கோவிக்கிடம் வீழ்ந்தார் இந்தியாவின் சானியா



மிர்சா. கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற இந்த ஆட்டத்தில் சானியாவை 6-2,6-2 என்ற நேர் செறறுக்களில் எளிதாக வென்றார் ஜெலினா. மொத்த ஆட்டமும் 50 நிமிடங்களுக்குள் முடிவுக்கு வந்தது குறிப்பிடத்தக்கது.

முதல் செட் 20 நிமிடங்களிலேயே முடிவுக்கு வந்தது. சானியாவின் சர்வீஸ்களை மூன்று முறை முறியடித்தார்.ஜெலினா. முதல் முறையாக சர்வீசைத் தக்க வைத்துக் கொண்ட போது,5-2என்ற கேம் கணக்கில் முன்னிலை பெற்றிருந்தார் ஜெலினா. ஜெலினாவின் ஆட்டத்துக்கு சானியாவால் சரியான பதிலைத் தர முடியவில்லை.

இரண்டாவது செறறில் 2-2 என்ற கணக்கில் சமநிலை நிலவிய போது, சானியா மீண்டெழுவார் என்ற நம்பிக்கை 5 ஆயிரம் ரசிகர்களுக்கு ஏற்பட்டது.

ஆனால் அந்தச் சூழ்நிலையிலதான் சானியாவின் அனுபவமின்மை வெளிப்பட்டது. சானியாவின் சர்வீஸை முறியடித்ததுடன், தனது சர்வீஸையும் தக்க வைத்துக் கொண்டார் ஜெலினா. இதனால் 4-2 என்று முன்னிலை பெற்றார்.

மேலும், மீண்டும் சானியாவின் சர்வீஸை முறியடித்தார் ஜெலினா. பிறகு தமது சர்வீஸைத் தக்க வைத்துக் கொள்ள, 6-2 என்ற கணக்கில இரண்டாவது செற்றும் வசமானது. இந்த ஆட்டத்தில் வழக்கமான சானியாவைக் காணமுடியவில்லை. இதில சானியா வெற்றி பெற்றிருந்தால், அரை இறுதியில் முன்னாள் நம்பாவன் வீராங்கனையான செரீனா வில்லியமஸுடன் மோதும் வாய்ப்பை சானியா பெற்றிருப்பார். இருவரும் அவுஸ்தரேலிய ஓபனில் ஏற்கனவே மோதியுள்ளனர்.

மற்றொரு ஆட்டத்தில் அவுஸ்தரேலிய ஓபன் டெனிஸ் சம்பியன் செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா) ஸ்லோவாகிய வீராங்கனை டேனிலா ஹன்ட்டு சோவாவை 6-4,6-3 என்ற செற் கணக்கில் வென்றார்.

அரை இறுதியில் செரீனாவும் ஜெலினாவும் மோதுகின்றனர்.(ற)



மெட்ரிட்டில் நடந்த ஐரோப்பிய தடகள சம்பியன்ஷிப் போட்டி களில், பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் பங்கேற்ற சுவீடன் வீராங்கனை கரோலினா கிளப்டின் அற்புத தாவல்.

# 'கிரிக்கெற் போட்டியைப் பார்க்க இந்தியா அழைத்தால் செல்வேன்' –முஷாரப்

இந்திய அரசு அழைத்தால், கிரிக்கெற் போட்டியைப் பார்க்க கட்டாயம் இந்தியா செல்வேன் என்று தெரிவித்துள்ளார் பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப்.

இந்தியா,பாகிஸ்தான் கிரிக்கெற் தொடர் நாளை மறுதினம் தொடங்குகிறது.மூன்று டெஸ்ட் போட்டிகள் முதலிலும்,ஆறு ஒருநாள் போட்டிகள் அதறகடுத்ததாகவும் நடக்கின்றன. இந்தப் போட்டிகளைக் காண பாகிஸ்தான் அதிபர் முஷாரப்புக்கு ஆசை.

இந்திய அணி கடந்த முறை பாகிஸ்தான சென்று விளையாடிய போது ஒருநாள் போட்டிகளை நேரில் கண்டு ரசித்தவர் முஷாரப். கிரிக்கெற் மீது இவருக்கு ஆர்வம் அதிகம். பாகிஸ்தான கிரிக்கெற் போர்டு புரவலராகவும் இவர் இருக்கிறார். இம்முறை கிரிக்கெற் பார்க்க இந்தியா செல்வீர்களா? என நிருபர்கள் முஷாரப்பிடம கேட்டனர்.

அதற்குப் பதிலளித்த அவர், விளையாட்டுக்கள் எனக்குப் பிடிக்கும். அதில் கிரிக்கெற் ரொம்பப் பிடிக்கும். அதேசமயம் அழைப்பு இல்லாமல் எங்கும் செல்வது என் வழக்கமல்ல. இந்திய அரசு என்னை முறைப்படி அழைக்குமானால் அழைப்பு விடுக்குமானால், கட்டாயம் அங்கு சென்று கிரிக்கெற் பார்ப்பது பற்றி பரிசீலிப்பேன் என்றார்.



ராஜீவ் பிரதமராக இருந்த போது கிரிக்கெற் பார்ப்பதற்காக பாகிஸ் தானில் இருந்து ஷியா உல்ஹக் இந்தியா சென் றமை குறிப்பிடத்தக்கது. (ற-7)

# சச்சினுக்கு அனுபவம் கைகொடுக்கும் –கவாஸ்கர்

(புதுடில்லி)

காயத்தில் இருந்து மீண்டுள்ள



சச்சினுக்கு அனுபவம் கைகொடுக்கும் இவர் பாகிஸ்தானுக்கு எதிரான தொடரில் சிறப்பாகச் செயல்படுவார் என்கிறார் கவாஸ்கர்.

இவர் நேற்று முன்தினம் புதுடில்லியில் கூறியது,

இத்தொடர் சொந்த மண்ணில் நடப்பதால் இந்தியா சாதிப்பதற்கான வாய்ப்பு அதிகம் உள்ளது. நமது அணியில் சிறந்த பந்துவீச்சாளாகள் உள்ளனர். பேட்டிங்கிலும் திறமை வாய்ந்த வீரர்கள் இருப்பதால் சம வலிமையுடன் காணபபடுகிறது.

பாகிஸ்தானைப் பொறுத்தவரை ஒரு சில வீரர்களைத்தவிர மற்றவர்கள் புதுமுகமாக உள்ளனர். எநத அணியிடம் வேண்டுமானாலும் தோறகலாம். ஆனால், பாகிஸ்தானிடம் மட்டும் தோற்றுவிடக் கூடாது என்ற எண்ணம் இன்றும் நீடிக் கிறது.

பாகிஸ்தானில் நமது வீரர்கள் சிறப்பாகச் செயல்பட்டனர். இதே போன்ற ஆட்டத்தை இத் தொடரிலும வெளிப்படுத்த வேண்டும. அனுபவம் காயத்தில் இருந்து மீண்டுள்ள சச்சினுக்கு பிரச்சினை எதுவும் ஏற்படாது இவருக்கு அனுபவம் கை கொடுக்கும் தனது வழக்கமான ஆட்டத்தை நிச்சயமாக வெளிப்படுத்துவார்.

மொகாலி டெஸ்ட் போட்டியில் மூன்று வேகப்பந்து வீச்சாளர்களை இந்தியா பயன்படுத்தலாம். பதான் ஜாகீர், நெஹ்ரா, பாலாஜி என அனைவருமே உள்ளதால் வேகப்பந்து வீசசுக்கு முக்கியத்துவம் அளிக்க வேணடும். சுழற்பந்துவீச்சில் கும்ளே ஹர்பஜன் தவிர, சேவாக்கையும் பயன்படுத்தலாம். முகமதுகைப் மூன்று நாள் பயிற்சி போட்டியில் சதம் அடித்து தனது திறமையை நிருபிக்க வேண்டும். அப்போதுதான் டெஸ்ட் தொடருககான வாய்ப்பைப் பெறமுடியும். இவ்வாறு கவாஸ்கர் கூறினார். (ற)

முறைபடச் சூழ்ந்தும் முடிவிலவே செய்வர்
திறப்பாடு இலாஅ தவர் - குறள்

# வலம்புரி

## விபத்துக்களைத் தடுக்க விசேட நடவடிக்கை தேவை

யாழ். குடாநாட்டில் வாகன விபத்துக்கள் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளன. அதிலும் இராணுவ வாகனங்களால் ஏற்படும் விபத்துக்கள் இன்னமும் நின்றபாடில்லை.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தின் நகர மையத்தில் இராணுவ வாகனம் மோதியதில் யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மாணவி ஒருவர் பரிதாபகரமாக பலியானார்.

இச் சம்பவத்தையடுத்து பெரும் களேபரம் வெடித்தது. இதனால் பொதுமகன் ஒருவர் பலியானதுடன் பலர் காயமடையவேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் ஏற்பட்டது.

இராணுவ வாகன விபத்தையடுத்து ஏற்பட்ட களேபரத்தினால் யாழ். நகர மையத்தை அண்டியுள்ள பாடசாலை மாணவர்கள் பெரும் பதற்றமடைந்தனர். கடைகள் இழுத்து மூடப்பட்டன. யுத்தநிறுத்த உடன்படிக்கை ஏற்படுவதற்கு முன்னர் இருந்த சூழ்நிலை மீண்டும் உருவாகிவிட்ட பிரமையில் மக்கள் குழம்பிப் போயினர்.

இராணுவ வாகன விபத்தில் பாடசாலை மாணவி ஒருவர் பலியான சம்பவத்தையடுத்து வன்முறைகளும் களேபரமும் ஏற்படுவது ஏன்? யாழ்ப்பாணத்தில் எந்த விபத்துக்கள் ஏற்பட்டாலும் இவ்விதம் வன்முறைகள் வெடிக்கின்றனவா? போன்ற கேள்விகள் சிலரிடையே எழுவது செவிகளில் விழவே செய்கின்றது.

அது தொடர்பில் வாதப் பிரதிவாதங்கள் நடைபெறுகின்றபோது "விபத்து" என்பது வாகன நெரிசல்கள், போக்குவரத்து பாதைகளின் ஒழுங்கீனங்கள் போன்றவற்றால் ஏற்படவே செய்யும். இதற்காக இவ்வாறு களேபரம் ஏற்படவேண்டுமா? என்ற வாதங்கள் முன்வைக்கப்படலாம்.

இங்குதான் ஆழ்ந்து சிந்தித்து உண்மை நிலையை தெரிந்துகொள்ளவேண்டும். இராணுவ வாகனம் மோதியதில் மாணவி ஒருவர் உயிரிழந்தார் என்பதால் வன்முறைகள் வெடித்தது என்பதற்கு அப்பால் இராணுவத்தின் மீது தமிழ் மக்கள் கொண்டுள்ள எண்ணப்பாடே விபத்துக்களை தொடர்ந்து வன்முறைகள் வெடிப்பதற்கு காரணமாகின்றது என்ற உண்மை அறியப்படவேண்டியதாகும்.

அதாவது இராணுவ வாகன விபத்தில் பொதுமக்கள் பலியாகின்றவேளையில் அது இராணுவ சாரதியால் திட்டமிட்டு செய்யப்பட்டதென்றே கருதப்படுகின்றது. இதற்கு கடந்த காலங்களில் யாழ். குடாநாட்டில் இராணுவம் நடத்திய செல் தாக்குதல், விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல், தாமே கிரனைட்டை வெடிக்க வைத்துவிட்டு பொதுமக்களைத் சுட்டுக்கொன்ற நிகழ்வுகள் ஒவ்வொரு தமிழனிடமும் ஆழ்மனதில் அழியாது பதிந்துள்ளது.

அதேநேரம் தமிழ் மக்களின் வாழ்விடங்களில் இராணுவ வாகனங்கள் அடிக்கடி ஓடித்திரிய வேண்டிய தேவை என்ன? சிங்கள தேசத்தில் இப்படி ஏதேனும் நடக்கின்றதா?

ஆக, யாழ்ப்பாணம் ஓர் யுத்தம் நடக்கும் பூமி போலவும், அதனால் இராணுவ வாகனங்கள் அடிக்கடி ஓடித்திரிவது போன்ற தோற்றப்பாடும் தமிழ் மக்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தியுள்ளது.

அதிலும் பொதுமக்கள் என்ற பரந்த பரப்பிற்குள் சமகால இளைஞர்கள் உயர்கல்வி கற்கும் மாணவர்களிடையே மேற்போந்த தாக்கம் மிக உச்சம் பெற்றுள்ளது.

இதன் காரணமாகவே இராணுவ் வாகன விபத்துக்களை தொடர்ந்து வன்முறைகள் வெடிக்கின்றன. எனவே இது விடயத்தில் உரியவர்கள் உரிய நடவடிக்கைகளை எடுத்து விபத்துக்களைத் தடுக்க வழி செய்யவேண்டும்.

அத்துடன் இராணுவ வாகனங்களின் போக்குவரத்தை கட்டுப்படுத்தி சீர்செய்வதும் அவசியமாகும்.

# புலிகள் நேரடியாக அரசியலில் ஈடுபட்டு பாராளுமன்றத்திற்கு வர வேண்டும்

## பிரச்சினைகளுக்கு தீர்வுகாண இதுவே வழி என்கிறார் பிரதியமைச்சர் பண்டு பண்டாரநாயக்க

(வவுனியா)

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் எத்தகைய இடையூறுகள் வந்தாலும் பேச்சுவார்த்தை நடாத்தவே ஜனாதிபதி விருப்பம் கொண்டுள்ளதாக அரச பரிபாலன பிரதியமைச்சர் பண்டு பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று முன்தினம் புனர்வாழ்வு புனரமைப்பிற்கான அலுவலகத்தை திறந்து வைத்து உரையாற்றும்போதே பிரதியமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

யுத்தம் இல்லாத சமாதானத்தை ஏற்படுத்துவதே பொது ஜன ஐக்கிய முன்னணியின் நோக்கமாகும் விடுதலைப்புலிகள் நேரடியாக அரசியலில் ஈடுபட்டு பாராளுமன்றத்துக்கு வர வேண்டும் அப்போது எந்தப் பிரச்சினையையும் அங்கு பேசித தீர்த்துக்கொள்ள முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-8)

## 5 வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற குற்றச் செயல்கள் குறித்து அரசு விரைவில் விசாரணை நடாத்தும்

(கொழும்பு)

கடந்த 5வருட காலத்தில் இடம்பெற்ற பாரிய குற்றச் செயல்கள் தொடர்பாக விசேட விசாரணைகளை நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக புத்தசாசன மற்றும் பிரதிப பாதுகாப்பு அமைச்சர் ரத்தின சிறி விக்கிரமநாயக்கா தெரிவித்தார்.

இந்த நடவடிக்கையில் பல்கலைக்கழக ஆய்வுக்குழு ஒன்றும் ஈடுபடவுள்ளது.

பாரதூரமான குற்றச் செயல்களுக்குப் பொறுப்பானவர்கள் குறித்து முதலில் விசாரணைகள் நடத்தப்படவுள்ளன.

றோயல் கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்ற சமய நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளின் பின்னர் குற்றச் செயல்களோடு ஈடுபட்ட சமயச்சுழல், கல்விகற்ற சூழல் மற்றும் அவர் வசிக்கும் சூழல் தொடர்பாக முக்கியமாக ஆராயப்படவுள்ளதாக பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை,அறநெறிப் பாடசாலைகள் ஊடாக மாத்திரமின்றி சாதாரண பாடசாலைகள் ஊடாகவும் தர்மத்தைப் போதிக்க வேண்டும் எனவும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்தார்.

பழக்கவழக்கங்கள், சமயபோதனை மற்றும் கலாசார விழுமியங்கள் என்பன விலகிச் சென்றுள்ளதால் சமூகம் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதோடு பயங்கரவாதம் தலைதூக்கியுள்ளதாகவும் அவர் வலியுறுத்தினார்.

இவ்வாறான வெறுமையான சூழலை உருவாக்கும் தேவை வெளிநாட்டு சக்திகளுக்கு எழுந்துள்ளதாகவும அமைச்சர் சுட்டிககாட்டியுள்ளார். (க-9)

## மந்திகை மருத்துவமனை தரமுயர்த்தப்படவுள்ளது

(திருநெல்வேலி)

சுகாதார அமைச்சின் விசேட பணிப்புரைக்கு அமைய மந்திகை மருத்துவமனை தரம் உயர்த்தப்படும் என யாழ. மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ் அறிவித்துள்ளார்.

இவ் வைத்தியசாலையை தரம் உயர்த்துமாறும் இங்கு இருதயநோய் சத்திரசிகிச்சை உட்பட அனைத்து சத்திரசிகிச்சைகளையும் நவீன தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி மேற்கொள்ள வழிசெய்யுமாறும் ஏற்கனவே கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான சிவாஜிலிங்கம்,சிவநேசன் ஆகியோர் கோரிக்கை விடுததமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-43)

## புலிகளை அரசியலில் இணைக்க சர்வதேசம் ஆதரவு தர வேண்டும்

### ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச அமரசிங்க

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளை தேசிய அரசியலில் இணைத்துக்கொள்ளும் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு சர்வதேச சமூகம் ஆதரவு அளிக்கவேண்டும் என ஜே.வி.பியினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஆயுதப்போராட்ட அமைப்பான விடுதலைப் புலிகளை முற்று முழுதான அரசியல் கட்சியாக மாற்றுவதற்கான முயறசிகளுக்கு ஆதரவளிக்குமாறு ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க சர்வதேச சமூகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தாங்களும் ஆரம்பகாலத்தில் ஆயுதப் போராட்ட அமைப்பாக செயற்பட்டதாகவும் பின்னர் தேசிய அரசியலில் இணைந்து கொண்டிருப்பதையும் சுட்டிக்காட்டிய சோமவன்ச அமரசிங்க அதேபோல் விடுதலைப்புலிகளும் அரசியலில் இணைந்து கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார். (க-9)

## 180 மெற்றிக்தொன் கோதுமைமா யாழ்ப்பாணத்திற்கு விநியோகம்?

### —வர்த்தக அமைச்சர் தகவல்—

(கொழும்பு)

நாளை முதல் நடைமுறைக்கு வரும் வகையில் கூட்டுறவுச் சங்கங்களுக்காக வழங்கப்படும் ஒரு கிலோ கோதுமை மாவின் மொத்த விலையை குறைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போது 25 ரூபாவாக விற்பனை செய்யப்படும் கோதுமை மாவின் மொத்த விலை 50 சதத்தினால் குறைக்கப்படும் என வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார்.

அனைத்து கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அரசாங்கம் போதுமான அளவு கோதுமை மாவை விநியோகிப்பதற்கு துரித நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இதன்பின்னர் பாணுக்கு கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்க முடியும் என அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார்.

கோதுமை மாவை இறக்குமதி செய்வதற்காக அரசாங்கம் வழங்கிய நிவாரணங்கள் அண்மையில் ரத்து செய்யப்பட்டதை அடுத்து சந்தையில் கோதுமை மாவின் விலை அதிகரித்தது எனத் தெரிவித்தார்.

இதனாலேயே நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் பாணின விலையை அதிகரிப்பதற்கு பேக்கரி உரிமையாளர்கள் தீர்மானித்தனர் என்றும் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை யாழ்.மாவட்டத்திற்கு தேவையான கோதுமை மாவை விநியோகித்துள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

இதற்கமைய நாளை திங்கட்கிழமை 180மெற்றிக் தொன கோதுமைமா யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். (க-9)

## வடமராட்சி கிழக்குப் பகுதியில் புனரமைப்புப் பணிகள் துரிதம்!

(திருநெல்வேலி)

சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்குப் பகுதியை மீளப்புனரமைக்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்த வகையில் மருதங்கேணிப் பகுதியில் மாணவர் விடுதி முதியோர் இல்லம் மற்றும் கரையோரப் பாதுகாப்பிற்கான அணைகள் என்பனவற்றை அமைத்தல், வலைத் தொழிற்சாலை அமைத்தல், சிறு கைத்தொழில் கிராமங்களை அமைத்தல், சுனாமியால் உவர் நிலமாக மாற்றப்பட்ட பகுதியை நன்நிலமாக மாற்றுதல உள்ளிட்ட பல்வேறு வேலைத் திட்டங்கள் இங்கு மேற்கொள்ளப்படவுள்ளன. (ந-43)

## இலட்சார்ச்சனையும் ஹோமப் பெருவிழாவும்

(மட்டுவில்)

தென்மட்டுவில் வேரற்கேணி ஸ்ரீ கந்தசுவாமி ஆலய இலட்சார்ச்சனையும் ஸ்கந்த ஹோமப் பெருவிழாவும் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியுள்ளது.

எதிர்வரும் வியாழக்கிழமை வரை ஏழு நாட்கள் நடைபெறவுள்ள இவ் விழாவின் பூர்த்தி தினமாகிய 10ஆம் திகதி 1008 சங்காபிஷேகமும் விஷேட பூஜை அர்ச்சனைகளும் திருவிழாவும் நடைபெறும்.

இந்நாட்களில் மாலையில் இலக்கிய ஆன்மீகச் சொற்பொழிவுகளும் இடம்பெறுகின்றன. (க-7)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

நம்மை வாழ்க்கையின் ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு மாற்றுவதும், ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்குத் தள்ளி விடுவதும் கடவுளின் கருணை தான். அவரது செயல்தான். இதை உணர்ந்து எந்த சமயத்திலும், எந்த ஒரு நிகழ்ச்சி யிலும் சந்தோஷமாக இருங்கள்.

சுவாமி விவேகானந்தர்

# மாணவர்களின் போக்குவரத்து நேரங்களில் இராணுவவாகன நடமாட்டத்தை தடுக்க வேண்டும்

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

பாதுகாப்புப் படையினரின் அராஜகச் செயற்பாட்டினால் பாடசாலை மாணவியொருவரும பொது மகன் ஒருவரும் அநியாயமாகக் கொலை செய்யப்பட்டமையையும் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி இருவர் படுகாயமடைந்தமையையும் பலர்காயமடைந்தமையையும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வனமையாகக் கண்டிக்கின்றது என சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் இச்சம்பவம் தொடர்பாக வெளியிட்ட கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவங்கள் தொடர்பாக உணர்ச்சிவசப்பட்ட பாடசாலை மாணவர்களும் பல்கலைக்கழக மாணவர்களும் அமைதியான முறையில் சாத்வீகமாக எதிர்ப்பை தெரிவிக்க முற்பட்டபோது பாதுகாப்புப்படையினர் துப்பாக்கிப் பிரயோகமசெய்தும் குண்டாந்தடியால் அடித்தும் கண்ணீர்ப்புகைக் குண்டுகளைவீசியும் சமாதானத்திற்கு ஆப்புவைக்க முற்படுகின்றனர்.

இச்சம்பவங்களை கேள்வியுற்று தமது பிள்ளைகளை பாதுகாப்பாக வீட்டிற்கு அழைத்துச்செல்ல பாடசாலைக்கு விரைந்து சென்ற பெற்றோர்கள் பாதுகாப்புப்படையினரின் தாக்குதலுக்கு உள்ளாகி இருக்கிறார்கள்.

பாடசாலை விட்டுவீட்டிற்குச் செல்ல முயன்ற மாணவர்கள் படையினரின்பயமுறுத்தலினால் பாடசாலைகளுக்கு திருப்பிஅனுப்பப்பட்டனர். இச்சம்பவம் தொடர்பாக அமைதியை ஏற்படுத்த முயன்ற சர்வதேசமாணவர் பேரவையின் உறுப்பினர்கள் தங்கியிருந்த அலுவலகம், அத்துமீறி நுழைந்த பாதுகாப்புப் படையினரால் மிகவும் மோசமாகத் தாக்கப்பட்டுள்ளது.

அந்த அலுவலகத்தில் அமைந்திருந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் அலுவலகமும் தாக்கப்பட்டுள்ளது. அங்கு நிறுத்திவைக்கப்பட்டிருந்த வாகனங்களும் சேதமாக்கப்பட்டுள்ளன.

இச்சம்பவங்களின் உண்மை நிலையை வெளியுலகிற்குக்காட்டுவதற்காக செய்திகளைச் சேகரிக்கச் சென்ற பலபத்திரிகையாளர்கள் மிகமோசமாகத் தாக்கப்பட்டும் காயப்படுத்தப்பட்டும் உள்ளனர்.

இச்சம்பவங்கள் தொடர்பான உண்மையான தகவல்களை தெரிந்து கொள்ளாத இராணுவப் பேச்சாளர் சம்பந்தமில்லாத குற்றச்சாட்டுகளை கூறி உண்மைகளை மறைக்கமுற்படுவதோடு திசைதிருப்ப முனைவதும் கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

எதிர்காலத்தில் இத்தகைய சம்பவங்கள் நடைபெறாதிருக்க கீழ் வரும் நடவடிக்கைகள் எடுக்கும் வண்ணம் பாதுகாப்பு, மற்றும கல்வித்துறைக்கு பொறுப்பாக இருக்கும் அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்க இருக்கின்றோம். அந்தவகையில் பின்வரும் விடயங்களை முன்வைக் கின்றோம்

;ஏற்கனவே தங்களிடம் வேண்டிக் கொண்டதற்கு அமைவாக பாட்சாலைகளுக்கு அருகில இருககும் சகலபாதுகாப்பு படை முகாம்களையும் உடன் அகற்றி மாணவர்களின் சுதந்திரமான கல்விக்கு வழிசமைக்க வேண்டும்.

பாடசாலைகள் ஆரம்பமாகும் நேரத்திலும் முடிவடையும் நேரத்திலும் குறிப்பிட்ட சிலமணித்தியாலங்களுக்கு பாதுகாப்பு படையினரின் எந்தவொரு வாகனமும் வீதிகளில் நடமாடக்கூடாது.

மிகவேகமாகச் செல்லுகின்ற பாதுகாப்புப் படையினரின் வாகனங்கள் போக்குவரத்துக் கண்காணிப்பு காவல்துறையினரால் கண்காணிக்கப்பட்டு வேகக்கட்டுப்பாட்டை நடைமுறைப்படுத்த வேண்டும். (த)

## சர்வதேச...

26239 எனும் இலக்கமுடைய பொலிசாரே துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளார் என்பது எங்களால் அவதானிக்கப்பட்டுள்ளது. எனவே இது தொடர்பில் இராணுவத்தினரையும் பொலிசாரையும் விசாரித்து அதற்குரிய நஷ்டஈட்டை பெற்றுத்தருவதோடு இவர்களை சட்டத்தின் முன் நிறுத்துமாறும் வேண்டுகின்றோம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவிடமும் இச்சம்பவம் தொடர்பாக முறையிடப்பட்டதையடுத்து நேற்று முற்பகல் 11 மணியளவில் கண்காணிப்புக் குழுவினர் அங்கு சென்று நிலைமைகளைப் பார்வையிட்டனர். (ந-43)

# முல்லைத்தீவுக்கு 40 தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்படும்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவுக்கு 40 தொலைபேசி இணைப்புக்களை வழங்க தொலைத் தொடர்பு அமைச்சின் செயலாளர் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கென முல்லைத்தீவுப் பிரதேசத்தில் அரை ஏக்கர் காணி முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபரினால் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்ட அரசஅதிபர் பணிமனையின தேவைக்கென ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் செய்ம்மதி மூலமான தொலைத் தொடர்பு சேவை இணைப்பு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. (க-128)

## மட்டக்களப்பில்...

வந்தாறுமூலை களுவங்கேணி வீதியில் நேற்று நண்பகல் நடந்த துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தில் வேலுப்பிள்ளை புலேந்திரன் (வயது 32) என்பவர் கொல்லப்பட்டுள்ளார்.இந்நபர் கருணா அணியுடன் நெருக்கமான தொடர்புகளை கொண்டிருந்தார் என்று விசாரணைகளில் இருந்து தெரிய வந்திருப்பதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவ இடத்தில் இருந்து ரி. 56 ரக துப்பாக்கிக்குரிய வெற்றுத் தோட்டாக்கள், வெடிக்காத தோட்டாக்கள் 2 என்பன கண்டெடுக்கப்பட்டுள்ளன.

நேற்று முற்பகல் மட்டக்களப்பு நகரில் நடந்த வேறொரு துப்பாக்கிச்சூட்டுச்சம்பவத்தில் படுகாயமடைந்தவர் புளொட் அமைப்பின் சிரேஷ்ட உறுப்பினரான கந்தையா கணேசலிங்கம் (வயது 22) எனத் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு நகருக்கு வந்து சைக்கிளில் அலுவலகத்திற்கு திரும்பிக் கொண்டிருந்த சமயம் வீதியோரத்தில் பதுங்கியிருந்த நபர் ஒருவர், இவரது தலையில் துப்பாக்கியால் சுட்டு விட்டு மோட்டார் சைக்கிளில் தப்பிச்சென்றுள்ளார்.

மட்டக்களப்பு .வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த இவர் மேலதிக சிகிச்சைக்காக உலங்கு வானூர்தி மூலம் கொழும்பிற்கு கொண்டு செல்லப்பட்டார். (த-4)

## அரசின் புதிய தகவலுடன்...

கிளிநொச்சிக்கு நேற்று விஜயம் செய்த இலங்கைக்கான நோர் வேத்தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ் கருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான புலிகளின உயர்மட்ட தலைவர்களுக்கும் இடையே முக்கிய சந்திப்பு இடம் பெற்றது.

விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் காலை10.30 மணிக்கு ஆரம்பமான இச்சந்திப்பு பிற்பகல் 12.45 வரை நடைபெற்றது. இச்சந்திப்பின்போது வடக்கு கிழக்கு பகுதிகளில் நடந்த சில தினங்களாக இடம் பெற்றுவருகின்ற படுகொலை குறித்தும், பொதுக்கட்டமைப்பு குறித்தும் கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் இணைந்து பணியாற்றக் கூடிய வகையிலான பொதுக்கட்டமைப்புத்தொடர்பாக அரசாங்கத்தின் முக்கிய தகவல் ஒன்றை நோர்வேத்தூதுவர் நேற்றைய சந்திப்பின்போது விடுதலைப்புலிகளிடம் கையளித்திருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

அத்துடன்தொடர்ந்து பேச்சுக்களை நடத்த அரசு தயாராகவிருப்பதாகவும் . அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் முக்கியதகவல் என்ன என்பது வெளியிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இச் சந்திப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சார்பில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன், சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (04)

## ஆர்ப்பாட்டம்...

தோண்டி எடுத்தமையைக் கண்டித்து இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் மக்கள் ஈடுபட்டனர்.

நேற்றுக் காலையில் இப்பகுதியில் விளையாடச் சென்ற சிறுவர்களை இராணுவத்தினர் விரட்டியடித்தனர். அப்போது மையவாடியில் சடலங்கள் தோண்டப்பட்டிருப்பதை அச்சிறுவர்கள் கண்டு அதிர்ந்து பெரியவர்களிடம தெரிவித்தனர்.

இதனையடுத்து அவர்கள் அங்கே சென்றபோது அங்கிருந்த இராணுவச்சீருடை தரித்ததோர் முகாம் நோக்கிதப்பி ஓடிவிட்டனர். இதனால் ஆத்திரமுற்ற பள்ளிவாசல் நிர்வாகத்தினர் இராணுவ முகாமை நோக்கி சென்றபோது காவலரணில் அவர்கள் தடுக்கப்பட்டனர். இது குறித்து மக்கள் சார்பில் பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டது. இராணுவ முகாமினை விரிவாக்கும் நோக்கில் மையவாடிப்பகுதியில் நிலத்தை சமப்படுத்தும்போதே சடலங்கள் வெளிப்பட்டன என அங்கிருந்த இராணுவத்தினர் மக்களிடம் தெரிவித்தனர்.

எனினும், மக்கள் அதனை நிராகரித்தனர். இராணுவத்தின் அடாவடிச் செயலைக் கண்டித்து அங்கே ஆர்ப்பாட்டம் நடத்தினர். இதனால் கடைகள் அனைத்தும் பூட்டப்பட்டன. வீதிகளுக்கு குறுக்காக டயர்கள் போட்டும் எரிக்கப்பட்டன.

இதன் காரணமாக புல்மோட்டைக்கும் இதர இடங்களுக்கும் இடையிலான போக்குவரத்துக்கள் முற்றாகச் சீர்குலைந்தன.(த)

## புலிகள்-இராணுவம்...

புலிகளின் தூண்டுதல்களால் தான் மக்கள் இவ்வாறான செயல்களில் ஈடுபட்டதாக இராணுவப் பேச்சாளர் கூறியிருந்தார். இதற்கு வன்மையான கண்டனத்தை நாம் தெரிவித்ததுடன் எங்களின் அரசியல பணிபுரியும் எந்தப் போராளிகளும இச் சம்பவங்களில் எந்தவிதத்திலும ஈடுபடவில்லை என்பதனையும் உறுதிப்படுத்தியுள்ளோம். இதனை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரும இராணுவத் தளபதி அவர்களும் ஏற்றுக்கொண்டார்கள்.

பல்கலைக்கழக வாசலில் கொல்லப்பட்ட 65 வயதுடைய வயோதிபர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட பொலிசாரின் இலக்கத்தையும் கண்காணிப்புக் குழுவிடம் வழங்கியுள்ளோம். அதில் சம்பந்தப்பட்ட இராணுவத்தினரை அடையாளம் காட்ட முடியும் என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றோம். இறுதியில் மக்களைப் பாதிக்கின்ற, மக்கள் உயிர்களைப் பலியெடுக்கின்ற சம பவங்களும் விபத்து சம்பவங்களும் ஏற்படாமல் தவிர்க்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டோம்.

தொடர்ச்சியாக இவ்வாறான சம்பவங்கள் இடம் பெறுமானால் மக்களுடைய உணர்வுகளை கட்டுப்படுத்த முடியாது என்பதனையும் நாங்கள் அங்கு விரிவாக சுட்டிக்காட்டியுள்ளோம் என்றும் அரசியல்துறைப் பொறுப்பாளர இளம்பரிதி மேலும் தெரிவித்தார்.

இலங்கை யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழுவின் யாழ். மாவட்ட தலைவர் றொனபேசன் தலைமையில் நேற்றுக் காலை 10.45 மணியளவில் ஆரம்பமான இச் சந்திப்பு சுமார் மூன்று மணிநேரம் இடம்பெற்றது. இதில் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி, துணைப் பொறுப்பாளர் கண்ணன் மற்றும் பொது அமைப்புக்களின் பொறுப்பாளர் சுதாஸ் ஆகியோரும் இராணுவத் தளபதிகள் தரப்பில் யாழ். மாவட்ட தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் உட்பட்ட படைத் தளபதிகளும் பொலிஸ் தரப்பில் யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தல்பதாது மற்றும் யாழ். பொலிஸ அத்தியட்சகர் சாள்ஸ் விஜய வர்தன ஆகியோரும் கலந்துகொண்டனர்.

(ப-4-43)

# உலமாக்கள் குழு வட பகுதி பயணம்

புத்தளத்திலிருந்து வடமாகாண உலமாக்கள் இஸ்லாமிய குருத்துவகல்வி மாணவர்கள் உட்பட 160 பேர் அடங்கிய குழுவினர் வடபகுதிக்கான பயணத்தை மேற்கொண்டுள்ளனர்.

முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாண மாவட்டங்களுக்கு பயணம் செய்யவுள்ள அவர்கள் கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளை சந்திக்க உள்ளனர்.

இப்பயணம் குறித்து குழுவிற்கு தலைமை தாங்கி வரும் மௌலவி முபாராக்ரசாதி கூறியதாவது, முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆழிப் பேரலை அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு கல்வி நடவடிக்கைகளுக்கு தேவையான பொருட்களை அன்பளிப்பு செய்யஉள்ளோம் என்றார்.

மூன்று தினங்கள் வடபகுதியில இவர்கள் தங்கியிருப்பார்கள். ஆழிப பேரலை அனர்த்தம காரணமாக பாதிக்கப்பட்ட பகுதிகளையும் நேரில சென்று பார்வையிடவுள்ளனர்.(த)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மோட்டறோலா தொலைத் தொடர்பு உரிமையாளர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் இன்று மு.ப. 10.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

இக் கூட்டத்தில் அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கத் தலைவர்தேவராஜா கேட்டுள்ளார்.(த)

## சமகால அரசியல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நடாத்தும்சமகால அரசியல கருத்தரங்கு இன்று பி.ப. 3மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம் பெறவுள்ளது.

'சுனாமிக்கு பின்னர் இலங்கை அரசியலும் சர்வதேச அரசுகளின் அணுகு 'முறைகளும்' எனும் விடயம் குறித்து யாழ்.பல்கலைக்கழக அரசியல் சமூகவியல்துறை விரிவுரையாளர் கே.ரி.கணேசலிங்கம் கருத்துரை வழங்குவார். (க)

## சுட்டுக் கொலை

(கொழும்பு)

றாகம நகரத்தில் நேற்று பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பாதாள உலகக் கோஷ்டியைச் சேர்ந்தவர் எனச் சந்தேகிக்கப்படும் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்துக்குள் கொண்டு செல்லப்பட்டபோது பொலிஸார் ஒருவரின் கழுத்தை நெரித்து விட்டு தப்பியோடமுயன்ற போதே பொலிஸ் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் அவர் கொல்லப்பட்டார்.(த-8)

## 9 ஈழத்தமிழ் அகதிகள் தாயகம் திரும்பினர்

தமிழ் நாட்டிலிருந்து 9பேர் நேற்று முன்தினமிரவு கடல் வழியாக தலைமன்னார் திரும்பினர்.

தலைமன்னார் பகுதியிலுள்ள கடல் திட்டியொன்றில் இறக்கி விடப்பட்ட இவர்கள் கடற்படையினரால் மீட்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

பின்னர் இவர்கள் தலைமன்னார் பொலிசார் ஊடாக மன்னார் மாவட்ட நீதிபதி முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டு சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இதேவேளை கடந்த வியாழனன்று 3 பேர் தாயகம் திரும்பியிருந்தனர்.இவர்களில் சிங்களவர் ஒருவரும் அடங்குகிறார். (த)

## சிறுவன்...

பிரஸ்தாபச் சிறுவன் யாழ்ப்பாணம் கொக்குவில் வடக்கைச் சேர்ந்த பார்வதன் எனப்படும் வேலுதாஸ் கோபி என தெரிவிக்கப்படுகிறது. இவர் மேலதிக விசாரணைக்காக கொழும்பு துறைமுக பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (த)








இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.03.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.